# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை 2 வெள்ளிக்கிழமை(17-11-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:288


## கொழும்பு வாட் பிளேசில் ஆர்ப்பாட்டம்

# நோர்வேத் தூதரகத்தை மூடிவிட்டு நாட்டிலிருந்து வெளியேறக் கோஷம்!

## இல்லையேல் பாரிய விளைவுகள் ஏற்படும் என்றும் எச்சரிக்கை

கொழும்பு,நவம்பர்17

**நோர்வேயின் கொழும்பிலுள்ள தூதரகத்தை மூடிவிட்டு அந்நாட்டு அதிகாரிகள் அனைவரும் இங்கிருந்து வெளியேறிவிட வேண்டும். இல்லையேல் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.**

**வாட் பிளேசில் உள்ள நோர்வேத் தூதரகத்தின் முன்னால் கூடி நேற்று ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் இவ்வாறு எச்சரிக்கைக் கோஷங்களை எழுப்பினர்.**

நோர்வேயின் சமாதான முயற்சிகள் நிறுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்துவதற்காக சிஹல உறுமய கட்சியின் ஏற்பாட்டில் - தலைமையில் - நேற்றுப் பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

நோர்வேயின் சமாதானத் தூதுவர் - விசேட தூதுவர் - எரிக் சொலஹெய்மின் கொடும்பாவியையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் எரித்தனர்.

நாரஹேன்பிட்டியிலுள்ள சாலிகா மண்டபத்தின் முன்னால் நேற்றுக் கூடிய ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் வாட் பிளேசி

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு விமான சேவை மட்டும் இன்று இடம்பெறுகிறது!

### காலை 8 மணிக்கு வர அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,நவ.17

பலாலிக்கும் - இரத்மலானைக்கும் இடையில் இன்று ஆரம்பமாக இருக்கும் விமானச் சேவையில் பயணம் செய்வதற்கு பயணச்சீட்டுப் பெற்றவர்களை இன்று காலை எட்டு மணிக்கு சிங்கள மகா வித்தியாலயத்துக்கு வருமாறு யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் கேட்டுள்ளது.

ஒரு சேவை மட்டுமே இன்று இடம்பெறும் என்றும் -

பெரும்பாலும் நாளை இரு சேவைகள் இடம்பெறும் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

விமானத்தில் பயணம் செய்யும் பயணிகள் 15 கிலோ பொருள்களை மட்டுமே எடுத்துச் செல்ல முடியும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அனுமதியை இன்று முதல் 'றான்' அலுவலகத்தில் பார்வையிடலாம்

யாழ்ப்பாணம்,நவ.17

வெளிமாவட்டத்துக்குச் செல்லும் பயணிகள் தமது பாதுகாப்பு அனுமதியை இன்று முதல் தினமும் பிற்பகலில் வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபை அலுவலகத்தில் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

தினமும் பிற்பகல் 2மணி முதல் 4மணி வரை இதனைப் பார்வையிடலாம்.

அதே சமயம் - கடந்த 14ஆம் திகதி வரையான காலத்தில் பயண அனுமதிப் பத்திரம் பெற்றவர்கள் விமானத்தில் பயணம் செய்வதற்கான பதிவை இன்று மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## நாட்டின் அபிவிருத்திக்கு சவாலாக அமையும் அதிகரித்து வரும் பாதுகாப்புச் செலவினம்

### வாஷிங்டன் மாநாட்டில் பீரிஸ் கவலை

வாஷிங்டன்,நவ.17

புத்தாயிரம் ஆண்டில் இலங்கையின் பாதுகாப்புச்செலவு எதிர்பார்த்த 510 கோடியிலிருந்து 830 கோடியாக உயர்ந்துள்ளது. இது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பாரிய தடையாக அமைந்துள்ளது.

மேற்கண்டவாறு முன்னாள் பிரதி நிதி அமைச்சரும், அரசமைப்பு விவகார, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சருமான ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வாஷிங்டனில் மத்திய வருமானம் பெறும் நாடுகள் கலந்து கொண்ட உலக வங்கி மாநாட்டில் இலங்கை சார்பில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த மாநாட்டில் அவர் பேசுகையில் - மத்திய வருமானம் பெறும் நாடுகள் என்ற அந்தஸ்தைப் பெறுவதற்கு இலங்கை முயன்று வருகின்ற போதிலும் நாட்டின் தற்போது அதிகரித்து வரும் பாதுகாப்புச் செலவு அதற்குப் பெரும் முட்டுக்கட்டையாக உள்ளது. இந்த வகையில் பாதுகாப்புச் செலவு அதிகரிப்பு நாட்டின் முதலாவது பொருளாதாரச் சுமையாகும்.

பங்குச் சந்தையில் இலங்கை

(12ஆம் பக்கம் பார்க்க)

## நிமலனின் இடம் செல்வராசாவுக்கு நியமிப்பதற்குக் கூட்டணி முடிவு

கொழும்பு,நவ.17

படுகொலை செய்யப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நிமலன் சௌந்தரநாயகத்தின் இடத்துக்கு பொன்.செல்வராசாவை நியமிக்கும்படி தேர்தல் ஆணையாளரை தமிழர் விடுதலைக் கூட்டணி கேட்டுள்ளது.

அதே சமயம் இந்த நியமனம் தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி நேற்றுக் கொழும்பில் கூடி ஆராய்ந்தது.

அதன் பின்னர் அது வெளியிட்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மாநகரசபை கூட்டம் இன்று

யாழ்ப்பாணம்,நவ.17

யாழ்.மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் இன்று காலை 9.30 மணியளவில் பிரதி மேயர் என்.ரவிராஜ் தலைமையில் யாழ்.நகரில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாநகர சபையின் நிதிக் குழு, மராமத்துக் குழு, சுகாதாரக் குழு ஆகியன நேற்று பிரதி மேயர் தலைமையில் மாநகர சபைக் கட்டடத்தில் கூடின.

அந்த அந்தத் துறைகளில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அவை ஆராய்ந்தன.

அடுத்த மாதம் இடம்பெறவுள்ள வரவு - செலவு திட்டம் சம்பந்தமான கூட்டத்தில் புதிய மேயர் பதவியேற்பும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## கலைப்பீட மாணவி 'ராகிங்' பிரச்சினை சுமுகமாகத் தீர்வு

### இறுதி ஆண்டு மாணவிகள் மன்னிப்புக் கேட்டனர்

யாழ்ப்பாணம்,நவ.17

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட முதலாம் வருட மாணவி லோகநாதன் ரதிதேவி 'ராகிங்' செய்யப்பட்ட பிரச்சினைக்கு நேற்று சுமுக தீர்வு காணப்பட்டது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய கலைப்பீட இறுதியாண்டு மாணவிகள் 6 பேரும் தமது தவறுகளை ஏற்றுக்கொண்டு துணைவேந்தரிடம் மன்னிப்புக் கேட்டனர்.

இதனைத் தொடர்ந்து இச் சம்பவம் தொடர்பாக 6 மாணவிகளும் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிடமிருந்து வாங்கிய கரையோர ரோந்துக் கப்பல் அடுத்த மாதம் கொழும்பு வரும்

கொழும்பு,நவ.17

இந்தியாவிடமிருந்து இலங்கை கொள்வனவு செய்துள்ள 'சுகன்யா' ரக கரையோர ரோந்துக் கப்பல் அடுத்தமாதம் முதல்வாரம் கொழும்பை வந்தடைய இருக்கின்றது.

இதே ரகத்தைச் சேர்ந்த இரு கப்பல்களை இலங்கை கொள்வனவு செய்யவிருக்கின்றது.

அடுத்த கப்பல் 2002ஆம் ஆண்டே இலங்கைக்கு வந்துசேரும்.

1989 ஆம் ஆண்டு கொரியாவிடம் கொள்வனவு செய்த 'சுகன்யா'

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாவற்குழியில் தாக்குதல்!

கொழும்பு,நவ.17

நாவற்குழியில் படையினரின் முன்னரங்க நிலைகள் மீது நேற்றுமுன்தினம் காலை 6.30 மணியளவில் விடுதலைப்புலிகள் மோட்டார் தாக்குதலை மேற்கொண்டனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலை படையினர் மோட்டார் மற்றும் ஆட்லறித் தாக்குதல் மூலம் முறியடித்தனர் என்றும்- இதில் விடுதலைப்புலி உறுப்பினர் இருவர் உயிரிழந்தனர் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி

அன்பர்களும், நிறுவனங்களும், பாடசாலைகளும், ஆலயங்களும், சமூக நிலையங்களுமாக நேற்று(16-11-2000) 'நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி'க்கு தமது அன்பளிப்புக்களை வழங்கியிருந்தனர். அவர்களின் விவரங்கள் நாளைய உதயனில் வெளிவரும்.

**நேற்றுவரை இந்நிதிக்குக் கிடைத்த மொத்தத் தொகை ரூ. 766,714**

## மண்எண்ணெய், டீசல் விலை உயர்வு

கொழும்பு,நவ.17

டீசல், மண்எண்ணெய் ஆகியவற்றின் விலை நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இதன்படி கொழும்பில் ஒரு லீற்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டுவில் அம்மன் கோயிலிலிருந்து தங்க நகைகள் மற்றும் பணம் மீட்பு

### ஊடகத் தகவல் நிலையம் அறிவிப்பு

கொழும்பு,நவ.17

மட்டுவில் வடக்கில் உள்ள பன்றித்தலைச்சி அம்மன் கோயிலின் இரும்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த நகைகளையும் பணத்தையும் அந்தக் கோயில் குருக்கள் கடந்த புதன்கிழமை மீட்டுள்ளனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ஊர்காவற்றுறைக்கு மின் வழங்கும் திட்டம் தாமதம்

ஊர்காவற்றுறைப் பகுதிக்கு மின் வழங்க மின்பிறப்பாக்கி ஒன்று கிடைத்துள்ளதாக ஊர்காவற்றுறை பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எனினும் மின் வழங்கும் வேலைகளை நடைமுறைப்படுத்துவதற்கு கிராமிய மின்வசதித் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி நிறுத்தப்பட்டிருப்பதால் மின் விநியோகத் திட்டத்தை ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீடு தொடர்பான விவரங்களைப் பெற்ற பின்னரே திட்டத்தை செயற்படுத்த முடியும் என்று அவர் தெரிவித்தார்.

அண்மையில் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இந்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டது. (ஐ-16)

## மலத்தியோன் விசிறல்

மண்கும்பான், அல்லைப்பிட்டி ஆகிய பகுதிகளில் மூளை மலேரியாவை ஏற்படுத்தக்கூடிய நுளம்பு வகைகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால் தற்போது அப் பிரதேசங்களுக்கு மலத்தியோன் விசிறப்பட்டு வருவதாக ஊர்காவற்றுறை சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-16)

# திணைக்களத்துக்குச் சொந்தமான 'பிக்கப்' வாகனம் கடத்தப்பட்டது

மட்டக்களப்பு நிர்மாணத்திணைக் களத்துக்குச் சொந்தமான 'பிக்கப்' வாகனம் ஒன்று அதன் சாரதியுடன் நேற்றுப் பிற்பகல் 2:30 மணியளவில் வந்தாறுமூலையில் வைத்து இனந் தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து வாழைச் சேனைக்குச் சென்றுவிட்டு மட்டக் களப்பு நகர் நோக்கி வாகனம் வந்து கொண்டிருந்த சமயம் வந்தாறுமூலை கால்நடை அபிவிருத்தி அலுவலகத்துக்கு முன்னால் இடைமறித்த சிலர் வாகனத்தைக் கடத்திச் சென்றனர் என்று ஏறாவூர் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-7-21-8)

## புலிகள் தரப்பில் உயிரிழந்த 9 பேரின் விவரம்

பல்வேறு மோதல் சம்பவங்களில் தமது தரப்பில் உயிரிழந்த 9 பேரின் பெயர் விவரங்களை விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

★ வேதிகா (ஏகாம்பரம் தங்கமுத்து- மட்டக்களப்பு)

★ இசைவிழி (முத்துராசா சியாமளா- முத்தையன்கட்டு)

★ ராமர் (வேலாயுதம் ராமச்சந்திரன்)

★ சந்திரன் (கந்தசாமி சந்திரராசா)

★ சந்திரன் (சுந்தரம் ராமச்சந்திரன்- யாழ்ப்பாணம்)

★ பழனி (இராமையா புஸ்பராசா - கண்டி)

★ சுதாகரன் (கிறிஸ்ரின் சுதாகர்- யாழ்ப்பாணம்)

★ இறைமதி (தனபாலன் கனகராணி- யாழ்ப்பாணம்)

★ பழனிநாதன் (கந்தக்குட்டி ஜெயநாதன்- அம்பாறை) (இ-7)


COMPUTER & COMPUTER ACCESSORIES



இன்னும் சில கணனிகள் மட்டுமே!
கையிருப்பில் உள்ளதால்
சந்தர்ப்பத்தை தவறவிடாது இன்றே நாடுங்கள்.
நவீன முறையில் அதி உயர்ந்த தரத்தில்
Computer Typing செய்துகொள்ள
SRI MURUGAN COMMUNICATION
Computer system
303, K.K.S.Road, Jaffna. T.P - 021-2670, 3214, 3588
(C/13858)

முன்னோடிப் பரீட்சைகள் நிறுவனம்
யாழ்ப்பாணம் - இலங்கை
நாளை ஆரம்பமாகின்றது...
பரீட்சை:- க.பொ.த.சாதாரணதரம் 2000 Nov.
(சகல பாடங்களும்)
பரீட்சை நிலையங்கள்
* மணி கல்வி நிறுவனம் - வேலணை.
* ஜீவபாரதி கல்வி நிறுவனம் - நயினாதீவு.
* நியூ பிறைற் கல்வி நிறுவனம் - யாழ்ப்பாணம்.
* கலைவாணி கல்வி நிறுவனம் - கோப்பாய்.
பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்கள் மேற்படி பரீட்சை நிலையங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
மேற்படி பரீட்சைக்குத் தோற்றத் தவறிய மாணவர்கள் வினாத்தாள்களை 27-11-2000 முதல் பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.
- நிறைவேற்று இயக்குநர்
பரீட்சகர் - யாழ்ப்பாணம். T.P.: 2578 (80602)

NEW SCIENCE COLLEGE, JAFFNA
பௌதிகவியல்
திரு.கருணாநிதி B.Sc.(Spl)
2002 A/L - பொறியியல் (நீர் நிலையியல்)
ஆரம்பம்:- நாளை 18-11-2000 (சனி), SAT. 9.00-10.00
(80621)


# கண்ணீர் அஞ்சலி

உயர் தொழில் நுட்ப நிறுவன எழுதுவினைஞராகிய

*செல்வி செ.பத்மாம்பிகையின்* அன்புத்தந்தையார்

## சு.செல்வத்துரை.

அவர்கள் 15-11-2000 அன்று காலமானார். இத்துன்பத்தில் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இயக்குநர், விரிவுரையாளர்,
அலுவலகத்தினர், ஊழியர்கள்.

(80616)

# ஸ்கந்தாவின் நினைவஞ்சலி

அமரர் பிரம்மஸ்ரீ

## செ.ந.நடராஜன்

எமது கல்லூரியில் 20ஆண்டுகள் அயராது உழைத்த இளைப்பாறிய ஆசிரியப் பெருந்தகையின் மறைவுச் செய்தியறிந்து துயருடன் அவரை நினைந்து வணங்குகிறோம்.

அதிபர், ஆசிரியர் கழகம்,
ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை,
சுன்னாகம்.

(80613)


புலமைப்பரிசில் -2001
14 - ஆவது பரீட்சையில் அதிகூடிய புள்ளி பெற்றோர்
* ந.திருத்தணிகன் - 169 (யா.இ.ஆ.பா)
* நி.ஜனலக்ஷன் - 160 (யா.இ.ஆ.பா)
* ஆ.ஜதிகானந்த் - 156
* இ.கதுஷா - 151
* வெ.ஜெயப்பிரசாந்த - 149 (யா.இ.ஆ.பா)
அடுத்த பரீட்சை:
19-11-2000
BOND
யாழ்நகர்.
(80618)

லஷ்சுமி சினிமா
இணுவில்
அர்ஜுன், ரம்பா
நடித்த
சுதந்திரம்
ரீல்ஸ்
காட்சிகள்:10.30, 2.30
(பழையநேரம்)
(80635)

ராஜா யாழ்ப்பாணம்
சிவா, மோகினி, நாசர்,
ஸ்ரீவித்தியா,
வெண்ணிறாடைமூர்த்தி
மற்றும் பலரின் நடிப்பில்
சுர்யமான
ரோஜாவே
காட்சிகள்:10.30, 2.00 (பு.நே.)
20.11.2000 முதல்
துள்ளாத மனமும் துள்ளும்

நாகம்ஸ் சுன்னாகம்
அஜித் (இரு வேடம்),
சிம்ரன், விவேக்
நடித்த
வாலி
(ரீல்ஸ்)
காட்சிகள்- 11.00, 2.30 (பு.நே)
18 ஆம் திகதி (சனி) முதல்
அர்ஜுனின்
அடிமைச்சங்கிலி
(C/13810)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
பாடசாலை விஞ்ஞான நிகழ்ச்சி 2000/2001
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினால்
இந்த வருடம் நடத்தப்படும்
யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான
வினாவிடை எழுத்துப் போட்டியும்,
கட்டுரைப் போட்டியும்.
நாளை (18-11-2000) சனிக்கிழமை
யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி,
யா/மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி,
யா/வட.இந்து மகளிர் கல்லூரி,
யா/வேலணை வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம.வித்தியாலயம்
ஆகிய பரீட்சை மண்டபங்களில்
வினாவிடைப் போட்டி 10.30 மு.ப - 11.30 மு.ப
கட்டுரைப் போட்டி 11.45 மு.ப - 12.45 பி.ப
ஆகிய நேரங்களிலும் நடைபெறும்.
தலைவர்,
யாழ்ப்பாண
விஞ்ஞானசங்கம்.
(80595)


# நீங்காத நினைவில் ஓராண்டு நிறைவோடு என்றும் எம் உள்ளங்களில் வாழ்ந்துகொண்டிருக்கும்....



ஜோதியாய் கலந்த எம் தெய்வத்தாய்

## திருமதி சரஸ்வதி சிவராமன்

மலர்வு: 24.09.1950 ஜோதியிற் கலந்தது: 28.11.1999

திதி: 17.11.2000

ஆண்டொன்று சென்றாலும் உன் அன்புமுகம்;
ஆதரவு இல்லாமல் அலைகின்றேன் என் இனிய தாயே;
காலம்தான் சென்றாலும் உன்நினைவு வாசல்வரை;
கண்ணீரால் கரைகின்றோம் அம்மா எங்கு சென்றாய்;
ஜோதியாய்தான் கலந்தாயோ கண் இமைப்பதற்குள்;
ஆண்டவன்தான் அழைத்துச் சென்றானோ இனியாரோ;
சாந்தி சாந்தியென பலமுறை சொன்னாலும் துயரம் துயரம்தான.

தங்கள் ஆத்ம சாந்திக்கான கிரியைகள் இன்று (17.11.2000) வெள்ளிக்கிழமை பகல் யாழ்.இலங்கயன் அச்சகப் பதிப்பகசாலையில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறுவதால் அனைவரும் கலந்து ஆத்ம சாந்தி பெற பிரார்த்தித்து மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நினைவோடு பிரார்த்தனை செய்யும் நல் இதயங்கள்,

☆ திரு.சண்முகம் சிவராமன் (கணவர்) இலங்கயன் பதிப்பகம் (ஸ்ரீ லங்கா அச்சகம்) காங்கேசன்துறை வீதி, பதிப்பகசாலை, யாழ்ப்பாணம்.
☆ திருமதி வேலுப்பிள்ளை தங்கம்மா (தாயார்)
☆ குமாரசாமி (லண்டன்) ☆ கமலாம்பிகை (பிரான்ஸ்)
☆ புஸ்பமணி (லண்டன்) ☆ வாலாம்பிகை (லண்டன்)
☆ திருநாவுக்கரசு (ஆஸ்திரேலியா)
☆ திருநீலகண்டன் (லஷ்மி அச்சகம் - கொழும்பு)
☆ கணேசமூர்த்தி (கொழும்பு) ☆ புண்ணியமூர்த்தி (கொழும்பு)
☆ சண்முகசேகரம்பிள்ளை (மல்லாவி)

ஆகிய உடன் சகோதரர்கள்.

நாளெல்லாம் உன் நினைவு தானம்மா!

- குடும்பத்தினர்.

இலங்கயன் பதிப்பகம்,
காங்கேசன்துறை வீதி,
பதிப்பகசாலை, யாழ்ப்பாணம்.

(80530)

# கொள்ளுப்பிட்டி அரச முதலீட்டு வங்கியில் கொள்ளையிட துணிகர முயற்சி!

## பாதுகாப்பு அதிகாரிகள் முறியடித்தனர்

கொழும்பு,நவ.17

கொள்ளுப்பிட்டியில் உள்ள அரச முதலீட்டு வங்கியில் இருந்து பணத்தைக் கொள்ளையிடும் முயற்சி நேற்றுமுன்தினம் முறியடிக்கப்பட்டது.

வங்கிக்குள் புகுந்த நபரொருவர் அதன் காசாளரை நெருங்கி அவரின் கழுத்தை நெரித்துப் பணத்தை அபகரித்துச் செல்ல முயன்றார். அப்பொழுது பாதுகாப்பு அதிகாரி ஒருவர் அந்த நபர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ய முயன்ற வேளை கொள்ளையிட முயன்ற நபர் அவரின் துப்பாக்கியைப் பறித்ததுடன் தப்பிச் செல்லவும் முயன்றார்.

பாதுகாப்பு அதிகாரியும் குறிப்பிட்ட நபரும் ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்து மோதிக்கொண்ட போது அந்த இடத்திற்கு வந்த பொலீஸ் அதிகாரி ஒருவர் பாதுகாப்பு அதிகாரியைக் காப்பாற்ற முயன்றார். கொள்ளைக்காரர் தம்மிடம் குண்டு இருப்பதாகவும் தன்னை நெருங்கினால் அதை வெடிக்க வைக்கப்போவதாகவும் பயமுறுத்தினார். ஆனால் பின்னர் அவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

அந்த நபரிடம் தொலை தூரத்தில் இருந்து இயக்கும் "றிமோட் கொன்றோல்" கருவியும் ஒரு பைக்கற் பாலுமே காணப்பட்டதாக வங்கியின் பிரதம பாதுகாப்பு அதிகாரி தெரிவித்தார். (இ-10)

## நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி



குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்த சகோதரப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இளம் குடும்பத்துக்கு குடாநாட்டின் சமூகத்தின் சார்பில் தினைத்துணையேனும் கைம்மாறு செய்யும் ஒரு முயற்சியை 'உதயன்' ஆரம்பித்திருக்கின்றான் என்ற செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

பத்திரிகைப் பணிக்காக தனது குடும்பத் தலைவனையே பறிகொடுத்த அந்த இளம் குடும்பத்துக்கு குடாநாட்டுச் சமூகம் தனது பங்களிப்புமிக்க ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

★ உதவி நிதியை நேரில் 'உதயன்' பணிமனையில் பணமாகக் கையளிப்போருக்கு உடன் பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது.

★ காசோலை மூலமாக அனுப்ப விரும்புவோர் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள **C/A 2358** ஆம் இலக்கக் கணக்குக்கு அனுப்பவும். வெளிமாவட்டங்களில் இருந்து நன்கொடை அனுப்புவோர் மேற்படி கணக்கு இலக்கத்துக்குத் தொலைநகல் மாற்றம் (Fax Transfer) மூலம் அனுப்பவும்.

★ மேற்படி நிதிக்குப் பணம் சேகரிப்பதற்கு வெளியார் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றோம்.

★ நன்கொடை வழங்குவோரின் பெயர், விவரம் உதயனில் பிரசுரிக்கப்படும். பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர்களுக்கு உரிய முறையில் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு தொகை விவரம் பெயரின்றியே வெளியிடப்படும்.

குறிப்பு:- இந்நிதிக்குப் பணம் சேகரிப்பதாகக் கூறி சில மோசடியாளர்கள் படிவங்களைத் தயாரித்து பொதுமக்களிடம் நன்கொடை கேட்டுச் செல்வதாக அறியவந்துள்ளது. இது விடயத்தில் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

| 15.11.2000 (புதன்கிழமை) வரை கிடைத்த நிதி:- | ரூபா |
|---|---|
| முன்கொண்டுவரப்பட்டது | - 666,942.50 |
| 01. ஓர் அன்பர் - கம்பர் மலை, வல்வெட்டித்துறை | - 1,000 |
| 02. சத்தியபாலன் - மயிலணி, சுன்னாகம் | - 200 |
| 03. ஊழியர்கள் - தொழிநுட்பக்கல்லூரி, யாழ்ப்பாணம் | - 3,150 |
| 04. பகல்நேர மாணவர் மன்றம், தொழிநுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம் | -1,005.50 |
| 05. புனர்வாழ்வு பகுதி செயலகம் - யாழ்ப்பாணம் | - 6,200 |
| 06. யாழ். வணிகர்கழகம் - யாழ்ப்பாணம் | - 50,060 |
| 07. ஓர் அன்பர் - கோண்டாவில் மேற்கு | - 200 |
| 08. அதிபர், ஆசிரியர்கள், இணைந்த ஆசிரியர்கள் - டிறிபேக்கல்லூரி | - 2,400 |
| 09. பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் - சுன்னாகம் | - 5,000 |
| 10. சர்வதேச இந்து குருமார் ஒன்றியம், நீராவியடி | - 2,000 |
| 11. வி. மூர்த்தி - இரும்பு மதவடி | - 500 |
| 12. கடற்றொழிலாளர் கூ. சங்கம், சுழிபுரம் மேற்கு | - 1,000 |
| 13. போட்டோ பவா, ஸ்ரேசன் றோட், மிருசுவில் | - 200 |
| 14. உதவுங்கரங்கள் - யாழ்.மாவட்ட பேக்கரி உரி.சங்கம் | - 5,000 |
| 15. அதிபர், ஆசிரியர் கழகம், புனித சாள்ஸ் மகா வித். | - 1,500 |
| 16. இ. சுப்பிரமணியம், ஏழாலை தெற்கு, ஏழாலை | - 100 |
| 17. வி. எஸ். சிவகுமார், இலங்கை வங்கி, நெல்லியடி | - 200 |
| மொத்தம்: | - 746,659 |

## மாணவருக்கு நிதி உதவி

கரவெட்டி,நவ.17

கரணவாய் தெற்கு விநாயகர் வித்தியாலயத்தில் கல்வி கற்று தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சிவகுரு சஜிதா, கருணாகரன் பிரியந்தினி ஆகிய இருவருக்கும் அன்னை சாரதா புலமைப் பரிசில் நிதி உதவி வழங்கப்பட உள்ளது.

இந்தப் புலமைப்பரிசில் நிதி உதவி மூலம் இரு மாணவர்களும் தமது கல்வியைத் தொடர்வதற்கென மாதாந்தம் ஆயிரம் ரூபா வழங்கப்படும். (ஐ)

## வெற்றிடம் நிரப்பும் பட்டியல்

யாழ்ப்பாணம்,நவ.17

யாழ். பல்கலைக்கழகத்தின் 2000-2001 கல்வியாண்டுக்கான உயிரியல் விஞ்ஞான பிரிவின் முதலாவது வெற்றிடம் நிரப்பும் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

விஞ்ஞான பீட அறிவிப்புப் பலகையில் வெளியிடப்பட்ட மேற்படி பட்டியலில் குறிப்பிடப்பட்டவர்கள் உடனடியாக பதிவுகளை மேற்கொள்ளும்படியும் -

வகுப்புகள் எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளதாகவும்-

பதிவாளர் அலுவலகம் அறிவித்துள்ளது. (ஓ)


யா/தொண்டமனாறு
வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்

வருடாந்த பரிசளிப்பு விழா - 2000

காலம்: 18-11-2000 சனிக்கிழமை முற்பகல் 9 மணி

இடம்: பாடசாலைப் பிரார்த்தனை மண்டபம்

தலைவர்:
திரு.ந.அரியரத்தினம் அவர்கள்
(அதிபர்)

பிரதம விருந்தினர்:
திரு.சி.புஸ்பலிங்கம் அவர்கள்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், பருத்தித்துறைக் கோட்டம்)

பரிசில் வழங்குனர்:
திருமதி புஸ்பகுமாரி புஸ்பலிங்கம் அவர்கள்

✪ இவ்வருடாந்த பரிசளிப்பு விழா வழமை போல் லண்டன் நற்பணிமன்றத்தின் முழுமையான ஆதரவில் இடம் பெறுகிறது.

✪ இவ்விழாவில் திருக்குறட் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான சந்நிதியான் ஆச்சிரம ஆதரவில் வழங்கப்படுகின்ற பரிசில்களும் வழங்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
பழைய மாணவர்சங்கம். (80590)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



சிவகுமார் துவாரகன்

நாவற்குழியைச் சேர்ந்த செல்வன் சிவகுமார் துவாரகன் அவர்கள் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் மிலேனியம் ஆண்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 142 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்து எமது குடும்பத்துக்கும், பாடசாலைக்கும், எமது ஊருக்கும் பெருமை தேடித் தந்ததையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம.

'காமதேனு இனிப்பகம்'
நாவற்குழி,
மற்றும் பெரியப்பாமார் குடும்பம்,
மாமாமார் குடும்பம்.

(C/13852)



கல்விக்காய் சென்று கடலுக்கு இரையான ஹாட்லிக் கல்லூரி
உயர்தர உயிரியல் வகுப்பு மாணவர்களின்

முதலாமாண்டு நினைவஞ்சலிகள்!



சிவநாதன் ரவிசங்கர்
மலர்வு: 02-02-1981



பாலகிருஷ்ணன் பிரதீபன்
மலர்வு: 17-04-1981



பூரணமூர்த்தி கந்தர்வன்
மலர்வு: 11-05-1981



சுந்தரலிங்கம் சிவோத்தமன்
மலர்வு: 23-03-1981

உதிர்வு: 17-11-1999 (சர்வதேச மாணவர்தினம்)
சிரார்த்ததினம்: 5-12-2000

*யாம் பெற்ற மைந்தரென்றோ சொல்ல இன்று நீங்களில்லை!*
*ஹாட்லியின் மைந்தரென்றோ கடலன்னை தத்தெடுத்தாள்!*
*பெற்ற மனமெல்லாம் பற்றி எரிகையிலே*
*உற்ற உறவெல்லாம் உருகித் தவிக்கையிலே*
*கற்ற நண்பரெல்லாம் கலங்கி அழுகையிலே*
*கற்பித்த ஆசிரியரெல்லாம் விக்கித்து நிற்கையிலே*
*எமை விட்டு எங்கு சென்றீர்?*
*எம் மனதைக் கொண்டு சென்றீர்!*

பருத்தித்துறை.

*பெற்றோர், உறவினர், நண்பர்கள்.*

(80561)

## முக்கிய அறிவித்தல்

இரண்டாயிரமாம் ஆண்டில் கலைப்பிரிவில் வெளிவாரி(பேராதனை) பரீட்சைக்குத் தோற்றிய முதலாம் ஆண்டு மாணவர்சட்கான ஒன்றுகூடல் வைபவம் எதிர்வரும் [19-11-2000] ஞாயிற்றுக்கிழமை பி. ப. ஒரு மணிக்கு புதிய உயர் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் அனைவரையும் [புதிய உயர் கல்லூரிக்கு–ஆரியகுளச் சந்தி] வந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.

மாணவர் சார்பாக

தி. சம்பந்தன்

G.A.O.

(80612)



## நினைந்துருகல்

யா/ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியாசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர்

திரு. த. விஜயபாலசிங்கம்

(எழுதுவினைஞர், யாழ். கச்சேரி)

அவர்களின் அன்பு மாமியார்

### திருமதி அப்புத்துரை வள்ளியம்மை

இறைபதம் அடைந்தமை குறித்து எமது வித்தியாலயச் சமூகம் தமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கின்றது.

வித்தியாசாலைச் சமூகம்.

கொக்குவில். (80609)



## மரண அறிவித்தல்கள்

### திருமதி விஜயலட்சுமி நவரத்தினம்

(பெரிய பாப்பா)

இளவாலையைப் பிறப்பிடமாகவும், பலாலியை வசிப்பிடமாகவும், வவுனியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி விஜயலட்சுமி நவரத்தினம் (பெரிய பாப்பா) அவர்கள் 14 - 11 - 2000 செவ்வாய்க்கிழமை இரவு வவுனியாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இலங்கைநாயகம்—சிவயோகரத்தினம் (அன்னம் — இளவாலை) ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கையிலாயபிள்ளை நவரத்தினத்தின் அன்பு மனைவியும், முகுந்தனின் (ஆசிரியர் வவுனியா, முன்னாள் தெல்லிப்பழை ப.நோ.கூ.ச. உத்தியோகத்தர்) பாசமிகு தாயாரும், தபோதினி (ஆசிரியை, வவுனியா; முன்னாள் ஆசிரியை நகுலேஸ்வரா மகாவித்தியாலயம், கீரிமலை) யின் நேசமிகு மாமியாரும், சோபிதா, சோபிகா ஆகியோரின் பட்சமுள்ள பேர்த்தியாரும், காலஞ்சென்றவர்களான கதிரவேற்பிள்ளை, திருமதி இராஜேஸ்வரி கனகநாயகம் மற்றும் செல்வி சிவனேஸ்வரி (இளவாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 15-11-2000 புதன்கிழமை மாலை 167, ஸ்ரேசன் றோட், வவுனியா இல்லத்தில் நடைபெற்றது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:

ந. முகுந்தன் (மகன்)

167, ஸ்ரேசன் றோட்.
வவுனியா.
T. P. 024 21758 (80608)

### குணரத்தினம் செல்வத்துரை(பாரதியார்)

(பிரபல ஆயுள்வேத வைத்தியர் பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாசாலை ஓய்வுபெற்ற அதிபர், சைவ அபிவிருத்திச் சங்க உறுப்பினர்)

சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த குணரத்தினம் செல்வத்துரை 15 - 11—2000 அன்று காலமானார்.

அன்னார் மல்லாகம் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் இராசரத்தினம் (டென்மார்க்), இ சற்குணாம்பிகை, பொன் குணரத்தினம் (பொன் மாஸ்ரர்), வரதரத்தினம் (இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம், K. K. S.), கிமாலையரத்தினம் (கனடா), கிருபாரத்தினம் (இந்தியா), பத்மாம்பிகை (எழுதுநர், உயர் தொழில் நுட்பக்கல்வி நிறுவனம்—யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிறேமா (டென்மார்க்), இராசகுலேந்திரன் (பாமசிஸ்ற், கொழும்பு), திலகவதியார் (மல்லாவி மகாவித்தியாலயம்), சாந்தினி (பன்னாலை சேர் கனகசபை அ. த. க. பாடசாலை), சிவா (கனடா) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற சுழிபுரம் திருமதி தெய்வானைப்பிள்ளை, டாக்டர் பூலோகசுந்தரம், சங்கரப்பிள்ளை (ஆயுள்வேத வைத்தியர்), சிவக்கொழுந்து, திருச்செல்வம் (நுவரெலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் பொன்னம்பலம், சுப்பிரமணியம் (கூட்டுறவுப் பரிசோதகர்), வல்லிபுரம் (ஜெயில் காட்), மூத்துத்தம்பி (விகிதர்), இராசம்மா, தனலக்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(17-11-2000) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுழிபுரம் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

செ. பொன்னம்மா (மனைவி)

பத்மா (மகள்)

வரதன் (மகன்)

சுழிபுரம் மேற்கு. (80610)


## கவிமாமணி விருதுக்கான கவிதைப் போட்டி

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசையை முன்னிட்டு இந்துசமயப் பேரவை நடத்தும் கவிமாமணி விருதுக்கான கவிதைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

போட்டிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதி அட்டைகள் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்காதவர்கள் இன்று காலை 8 மணிக்கு முன்னர் கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாமென்று இந்து சமயப் பேரவை செயலாளர் இ. சக்திகிரீவன் தெவிரிவித்துள்ளார். (ஐ)

## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், தீவகம் லயன்ஸ் கழகங்கள் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ பரிசோதனை முகாம் நாளை மறுதினம் ஞாயிறு காலை 9 மணிக்கு ஊர்காவற்றுறை சென் அன்ரனிஸ் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் மாணவர்களுக்கான விசேட மருத்துவ பரிசோதனை மற்றும் பொது மக்களுக்கான இரதத அழுத்தம், சலரோகம், மார்பு புற்றுநோய், வாய் புற்றுநோய், கண் பரிசோதனை போன்றவற்றுடன் இலவச மருந்து வழங்கலும் இடம்பெறும்.

யாழ். போதனா வைத்தியசாலை டாக்டர் எஸ். குலநாயகம் மற்றும் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் இந்த மருத்துவ பரிசோதனைகளை நடத்துவார்கள். (ஐ-5)

## விளையாட்டு நிகழ்வுகள்

நெந்டுதிவு குழந்தை யேசு பாலர் பாடசாலை மற்றும் சென் அன்ரனீஸ் பாலர் பாடசாலை ஆகியன இணைந்து நடத்தும் விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு குழந்தையேசு பாலர் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

அன்ரன் ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ வி கிருஷ்ணசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்

கௌரவ விருந்தினர்களாக அரச அதிகாரிகள் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொள்வர். (ஐ-7)

★ ★ ★

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினால் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் அமரர் அ. தம்பிராசா ஞாபகார்த்தமாக நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டப் போட்டியில் நாளை சனிக்கிழமை மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகள் வருமாறு:-

★ நவாலி நாமகள் வி. க. எதிர் மல்லாகம் கிராம அபிவிருந்திச் சங்க வி. க.

★ இளவாலை யங்கென்றீஸ் வி. எதிர் அராலி சில்வர்ஸ்ரார் வி.க. (ஐ-86)

★ ★ ★

யாழ். மாவட்ட சதுரங்க அணித் தெரிவுக்காக யாழ்ப்பாண சதுரங்க சம்மேளனத்தால் நடத்தப்படும் போட்டிகளில் முதற் சுற்றுப் போட்டியின் இறுதி நாள் ஆட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இரண்டாம் சுற்றும் போட்டி நாளை மறுதினம் ஞாயிறு காலை 9 மணிக்ப் அதே இடத்தில் நடைபெறும். (ஐ-5)

## நாளைய நிகழ்வுகள்

வேலணை ஐக்கிய உதயமால் சனசமூக நிலையத் திறப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையத்தின் தலைவர் ஐ. சிவராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்ளும் வேலணை பிரதேச சபை தலைவர் ந. கருணாகரகுருமூர்த்தி யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஸ்ணசாமி ஆகியோர் புதிய சனசமூக நிலையக் கட்டடத்தினை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைப்பர். (இ-167)

★ ★ ★

கரவெட்டி விக்கினேஸ்வராக்கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை கல்லூரி அதிபர் கே. செல்வராஜா தலைமையில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக கணிதத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். ஸ்ரீசற்குணராசா பிரதம விருந்தினராக இவ் விழாவில் கலந்து கொள்வார். (இ-173)

★ ★ ★

கட்டைவேலி – நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மகளிர் குழுவும், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையும் இணைந்து நடத்திய அடிப்படை மனையியற் பயிற்சியின் நினைவையொட்டிய பொருள் காட்சியும், விற்பனையும் நாளையும் நாளை மறுதினமும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் மகளிர் குழுத் தலைவி திருமதி வ. பத்தினிப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பருத்தித்துறை போரூட் நிறுவன உதவித் திட்ட இணைப்பாளர் திருமதி தேவிகாராணி சிறிதரனும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சி. சிவநாதன், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அதிபர் திருமதி வி. சுகுமாரன், சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ. சுப்பிரமணியம், கொடிகாமம் பலநோக்குக் கூட்றவுச்சங்கத் தலைவர் பொ. கனகராசா ஆகியோரும் கலந்து கொள்வர் (இ-117)

★ ★ ★

நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு விழாவும், புதிய கட்டடத் திறப்பு விழாவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிலையத் தலைவர் இரா. தர்மரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என். மதனராஜ முதன்மை விருந்தினராகவும், யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ வி. கிருஷ்ணசாமி பிரதம விருந்தினராகவும், நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறைப் பகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே எக்ஸ். செல்வநாயகம், நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் புலவர் ஏ டபிள்யு. அரியநாயகம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் பி. பரஞ்சோதி, பிராந்திய பொறியியலாளர் எஸ். சிவசுப்பிரமணியம், ஈ.பி.டி.பி நெடுந்தீவுப் பொறுப்பாளர் கே. மோகன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (ஐ-7)

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் கமலின் நடிப்பில் உருவான 'ஹேராம்'' என்ற திரைப் படத்தைக் காண்பிக்க உள்ளன (இ-6-10)

★ ★ ★

முறைசாரா கல்வி-விசேட கல்விச் செயற்திட்ட உதவியாளர் உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9. 30மணி தொடக்கம் நடைபெறும்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் இப்பரீட்சைக்கான ஒழுங்குகளை யாழ். கல்வி வலயம் மேற்கொண்டுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

★ ★ ★

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க ஆட்சிக்குழுக் கூட்டம் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் திருகோணமலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் இடர்காலக் கொடுப்பனவுகள் வழங்கல், உரிய நேரத்தில் இலவசப் பாடநூல்கள் வழங்கப்படாமை, புதிய ஆசிரியர்களை உள்வாங்குவதில் தாமதம் ஆகியவை தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்து இந்த மாதம் 30ஆம் திகதி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள ஒரு நாள் வேலை நிறுத்தம் தொடர்பான இறுதி முடிவுகள் எடுக்கப்படவுள்ளதாகவும் அதிபர்கள் — ஆசிரியர்கள் இடையேயான தொடர்புகள் குறித்து ஆலோசிக்கப்படும் என்றும் ஆசிரியர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன (இ-ஒ)

★ ★ ★

அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் திருமதி கோ. அம்பலவாணரின் தலைமையில் நடைபெற உள்ள இந்த விழாவுக்கு யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் கலாநிதி சி க. சிற்றம்பலம், வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், சங்கானை கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. செல்லையா சிறப்புவிருந்தினராகவும், யாழ். வீதி அபிவிருத்தித் திணைக்களத்தைச் சேர்ந்த எஸ். சிவாஜீஸ்வரன், ஓய்வுபெற்ற உப அதிபர் வி. அம்பலவாணர் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

## சமய சந்திகளில்

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் கிழக்கு வாசல் தேரடியில் உள்ள 63வர் நாயனார் குருபூசை மடத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் யோகர் சுவாமி ஆயிலியம் நட்சத்திர பூசை, ஆராதனை வழிபாடுகள் இடம்பெறும்.

பஜனை, கூட்டுப்பிரார்த்தனை, யோகர்சுவாமியின் நற்சிந்தனை பாடல்கள் நடைபெறும். நண்பகல் 12–30 மணிக்கு அடியார்களுக்கு மகேஸ்வர பூசை இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவர் பெருமான் குருபூசைத் தினம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். குடாநாட்டில் உள்ள பாடசாலைகள், இந்து இளைஞர் மன்றம், இந்து சமயப் பேரவை, சனசமூக நிலையங்கள் ஆகியவற்றில் கொண்டாடப்படவுள்ளது. (ஐ-30)

## அமெரிக்க அதிபர் பதவித் தேர்தலில் புதிய சிக்கல்:

# வாக்கு மீள எண்ணப்படுவதை தடுக்க மாகாண அமைச்சர் மனுத் தாக்கல்!

வாஷிங்ரன், நவ. 17

அமெரிக்க அதிபர் தேர்தலில் புளோரிடா மாகாணத்தில் அளிக்கப்பட்ட வாக்குகள் ஆள்கள் மூலம் எண்ணப்படுவதை தடுத்து நிறுத்தும்படி அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து43ஆவது ஜனாதிபதியை முடிவுசெய்வதில் புதிய சிக்கல் தோன்றியுள்ளது.

கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற அதிபர் பதவிக்கான தேர்தலில் புளோரிடா மாகாணத்தில் அளிக்கப்பட்ட வாக்குகள் கணனி மூலம் எண்ணப்பட்டதில் குளறு படிகள் நிகழ்ந்ததாகக் கூறிய அல்கோரின் ஜனநாயகக் கட்சியினரின் கோரிக்கையை ஏற்று ஆள்கள் மூலம் 4 கவுண்டிகளில் மறுஎண்ணிக்கை நடத்தப்பட்டது. கணனியால் வாக்குகள் எண்ணப்பட்ட போது அல்கோரைவிட புஷ் அதிக வாக்குகள் பெற்றிருந்தார். ஆள்கள் மூலம் வாக்குகள் எண்ணப்பட்டபோது புஷ்பெற்றிருந்த அதிகப்படியான வாக்குகள் 300 ஆகக் குறைந்தது.

இதனால் உற்சாகமடைந்த அல்கோர் மேலும் 3 கவுண்டிகளில் வாக்குகளை ஆள்கள் மூலம் எண்ண உத்தரவிடும்படி மியாமி பெடரல் நீதிமன்றத்தில்மனுத் தாக்கல் செய்துள்ளார். அல்கோரின் கோரிக்கையை நிராகரிக்கும்படி புஷ் அதே நீதிமன்றத்தில் பதில் மனு சமர்ப்பித்தார்.

இந்த நிலையில் புளோரிடா மாகாணத்தின் குடியரசுக் கட்சியைச்சேர்ந்த அமைச்சர் காதரின் கிளாசிஸ் ஆள்கள் மூலம் வாக்குகள் எண்ணப்படுவதை முற்றாகத் தடுத்து நிறுத்தும்படி அமெரிக்க உச்ச நீதிமன்றத்திடம் கோரியுள்ளார்.

தபால் வாக்குகள்எண்ணப்படவேண்டியுள்ள நிலையில் புளோரிடா மாகாணத்தின் 25 வாக்காளர் மன்ற வாக்குகளைப் பெறுபவரே அடுத்த அதிபராவார் என்று கருதப்படுகிறது.

(ஒ-8)

## பிரபாகரனின் பெற்றோரிடம் வைகோவின்மகள் ஆசிபெற்றார்

சென்னை, நவ. 17

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை. கோபால்சாமியின் மகளின் திருமண வரவேற்பின் போது இந்திய அரசியல் தலைவர்கள் பலரின் மத்தியில் புதுமணத் தம்பதிகள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் பெற்றோரது காலில் விழுந்து வணங்கி ஆசி பெற்றனர்.

கடந்த புதன்கிழமை வடபழனி விஜயசேஷ மஹாலில் நடைபெற்ற திருமண வரவேற்பு நிகழ்ச்சியில்தமிழக முதல்வர் கருணாநிதி பஞ்சாப் முதல்வர் பிரகாஷ் சிங்பாதல், காஷ்மீர் முதல்வர் பரூக் அப்துல்லா, மத்திய அமைச்சர்கள், ஜோர்ஜ் பெர்ணான்டஸ் ஜஸ்வந்த் சிங், பிரமோத் மகாஜன், த.மா.க. தலைவர் மூப்பனார் உள்ளிட்ட இந்திய, தமிழக அரசியலின் முக்கிய தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

அப்போது வரவேற்பு மேடைக்கு பிரபாகரனின் பெற்றோர் மட்டும் அழைத்துச் செல்லப்பட்டனர். அனைத்துத் தலைவர்களின் முன்னிலையில் வை.கோபால்சாமியின் மகளும் அவரது கணவரும், வேலுப்பிள்ளை தம்பதியரின் காலில் விழுந்து ஆசி பெற்றுக் கொண்டனர்.

(ஒ)

## வீரப்பனால் புதிய சகாப்தம்; நடிகர் ராஜ்குமார் தெரிவிப்பு

ஈரோடு, நவ. 17

வீரப்பனால் புதிய சகாப்தம் தொடங்கியுள்ளதாக நடிகர் ராஜ்குமார் தெரிவித்தார்.

கடந்த 108 நாள்களாக வீரப்பனால் பணயக் கைதியாக வைக்கப்பட்டிருந்த ராஜ்குமார் விடுவிக்கப்பட்ட பின்னர் பெங்களூருக்குச் செல்வதற்காக ஹெலிமூலம் புறப்பட முன்னர் அங்கு திரண்டிருந்த கிராம மக்களிடையே தமிழில் உரையாற்றியபோது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அடர்ந்த காட்டுப் பகுதியில் இருந்து நகர வாழ்க்கைக்கு திரும்பியதை நம்ப முடியவில்லை; இது ஒரு கனவு போல் தோன்றுகிறது. கடந்த 108 நாள்களாக நல்ல ஓய்வு கிடைத்தது என்று அப்போது ராஜ்குமார் கூறினார்.

முன்னதாக பூதக்குடியில் உள்ள த.மா.கா. பிரமுகர் ராமராஜனின் இல்லத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தமது கடத்தலுக்குக் காரணம் விதி தான் என்று கூறிய ராஜ்குமார், தமது விடுதலை கன்னடர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையே சுமுக உறவு தொடர வழிகோலும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

வீரப்பன் தன்னை துன்புறுத்தாமல் நன்கு கவனித்துக் கொண்டதாகவும் ராஜ்குமார் குறிப்பிட்டார்.

(ஒ)

### உலக அரங்கில்

## இந்தியா நிராகரிப்பு

கட்டாரில் நடந்த இஸ்லாமிய நாடுகளின் கூட்டத்தில் காஷ்மீர் குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இந்தியா நிராகரித்துள்ளது

மத்திய உள்துறை அமைச்சின் அதிகாரி ஒருவர் இது குறித்து தெரிவிக்கையில் இந்தியாவின் உள் விவகாரங்களில் தலையிட இஸ்லாமிய மாநாட்டு அமைப்புக்கு தகுதி இல்லை என்று கூறினார்.

இஸ்லாமிய மாநாட்டுக் கூட்டத்தில் காஷ்மீரில் மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்படுவதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது (ஒ)

## விசாரணை

கடந்த ஆண்டு டிசெம்பரில் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் ஆப்கானிஸ்தானுக்கு கடத்தப்பட்டது தொடர்பாக அமெரிக்க புலனாய்வு அமைப்பு எப். பி ஐ வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருவதாக அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

## சௌத்ரியை பிரதமராக்கும்படி பிஜி உயர் நீதிமன்றம் உத்தரவு

பிஜியில் பதவி நீக்கப்பட்ட இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரதமர் மகேந்திர சௌத்ரி மீண்டும் ஆட்சியில் அமர்த்தப்படவேண்டும் என்று சுவா உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்தமே மாதம் ஜோர்ஜ் ஸ்பைட் தலைமையிலான பிஜி பூர்வகுடிக் கிளர்ச்சியாளர்கள் அதிரடிப் புரட்சி நடத்தி சௌத்ரி அரசைக் கவிழ்த்தார்கள்.

இந்திய வம்சாவளியினர் நாட்டின் அதிஉயர் ஆட்சி அதிகாரப் பதவி வகிக்க கிளர்ச்சியாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர். இதனையடுத்து ராணுவத்தால் இடைக்கால அரசு நியமிக்கப்பட்டது.

இந்த நிலையில், பதவி நீக்கப்பட்டது தொடர்பாக மகேந்திர சௌத்ரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

மேற்படி வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதி இடைக்கால அரசு நியமிக்கப்பட்டது சட்டவிரோதமானது. ஆகவே சௌத்ரி மீண்டும் பிரதமர் பதவியில்அமர்த்தப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்துள்ளது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்யப்போவதாக ராணுவம் அறிவித்துள்ளது. (ஒ-8)

## குற்றச்சாட்டு

கிரிக்கெட்டையும் அரசியலையும் வைத்து இந்தியா குழப்புகிறது. என்று பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் பர்வேஷ் முஷாரப் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தியா - பாகிஸ்தான் உறவுகள் நல்ல நிலையில் இல்லை என்பதால் அடுத்த மாத ஆரம்பத்தில் இந்திய கிரிக்கெட் அணியினர் பாகிஸ்தானுக்குச் செல்ல இருந்ததை இந்தியா தடை செய்துள்ளது

(ஒ-8)

# நடிகர் ராஜ்குமார் விடுதலை குறித்து எழுப்பப்படும் சந்தேகங்கள்

நிபந்தனைகள் எதுவும் நிறைவேற்றப்படாமல், தமிழக, கர்நாடக அரசுகளின் வாக்குறுதிகளை மட்டும் நம்பி நடிகர் ராஜ்குமாரை வீரப்பன் விடுவித்துள்ளது குறித்து பலத்த சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

வீரப்பனால் கடந்த ஜூலை மாதம் 30 ஆம் திகதி தமிழக எல்லையில் இருந்து கடத்தப்பட்ட ராஜ்குமார் உள்ளிட்ட நால்வரில் ஒருவர் தப்பி வந்ததும், மற்றொருவர் முன்னர் விடுவிக்கப்பட்டும் இருந்த நிலையில் தற்போது ராஜ்குமாரும் அவருடன் பணயம் வைக்கப் பட்டிருந்த நாகேஷ் என்பவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ராஜ்குமார் உள்ளிட்டோர் கடத்தப்பட்ட சிறிது நாளில் வீரப்பனைச் சந்திக்கச் சென்ற ''நக்கீரன்'' கோபால் மூலம் அவன் பல நிபந்தனைகளை விதித்திருந்தான்.

★ வீரப்பனைப் பிடிக்கச் சென்ற அதிரடிப் படையினரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கல்.

★ கர்நாடகாவில் தமிழை அலுவலக மொழியாக அறிவித்தல்.

★ பெங்களூரில் திருவள்ளுவர் சிலையைத் திறத்தல்.

★ தமிழகத்துக்கு காவிரியில் 205 டி. எம். சி. தண்ணீர் திறந்துவிடல்

★ 1991 ஆம் ஆண்டில் நடந்த காவிரிக் கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கல்

★ நீலகிரியில் 1 கிலோ பச்சைத் தேயிலைக்கு 15 ரூபா விலை நிர்ணயம்

★ தேயிலை தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 150 ரூபா வழங்க வேண்டும்

★ கர்நாடகாவில் சுட்டுக் கொல்லப்பட்ட 9 தலித்துக்களின் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு வழங்கல் ஆகிய நிபந்தனைகளுடன் —

தனக்கு உதவியதாகக்கூறி கர்நாடகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 51 பேரையும் தமிழகச் சிறையில் உள்ள 5 தமிழ்த் தீவிரவாதிகளையும் விடுதலை செய்ய வேண்டும் என்ற அதிமுக்கிய நிபந்தனையையும் வீரப்பன் கோபால் மூலம் தெரிவித்திருந்தான்.

வீரப்பன் ராஜ்குமார் உள்ளிட்டோரை விடுவிக்க பணம் எதையும் கோரவில்லைஎன்று அப்போது கூறப்பட்டது.

மேற்படி நிபந்தனைகளில் சிலவற்றை நிறைவேற்ற முடியாததன் காரணங்களை கோபால் மூலம் தெரிவித்த தமிழக, கர்நாடக அரசுகள் நிபந்தனைகளில் குறிப்பிட்டிருந்த நஷ்டஈடுகளுக்காக நிதிகள் ஒதுக்கியும் விசாரணைகள் நடத்தியும் வந்தன.

ஆனால் இதுவரை இவை தொடர்பான நிபந்தனைகள் எதுவுமே நிறைவேற்றப்படவில்லை.

இதேபோல் கர்நாடக சிறையில் உள்ள தமிழர்கள் மற்றும் தமிழ்த்தீவிரவாதிகள்விடுதலையில வீரப்பன் பிடிவாதமாக இருந்த போதும் — தமிழக,கர்நாடக அரசுகள் இந்த விடயத்தில் முழுவீச்சில் நடவடிக்கை எடுத்த போதும் — வீரப்பனால் கொல்லப்பட்ட பொலீஸ் அதிகாரியின் தந்தை உச்சநீதிமன்றத்தில் முறையிட்டதை அடுத்து அந்த நிபந்தனையும் நிறைவேற்றப் படமுடியாமல் போனது.

இந்த நிலையில் ஏற்னவே தூதராக 5 முறை சென்ற கோபால் தவிர்க்கப்பட்டு பழ நெடுமாறன், பேராசிரியர் கல்யாணி புதுவை, சுகுமாரன் என்ற புதிய அணி தூது சென்று ராஜ்குமாரை மீட்டு வந்துள்ளது.

இது குறித்தே தமிழகத்தில் பல சந்தேகங்கள் எழுப்பப் பட்டு உள்ளன.

ஆஸ்துமா நோயால் பீடிக்கப்பட்டுள்ள வீரப்பன் மழை காலங்களில் நோயின் தீவிரத்தால் கடுமையாகத் தாக்கப் படுவது வழக்கம். அதனால் மழைகாலமான ஜூலை இறுதி தொடக்கம் 6 மாதங்களுக்கு தேவையான பணம் மற்றும் உணவுப்பொருள்கள், மருந்துகள் ஆகியவற்றை அதிகளவில் வாங்கிக் கொண்டு அடர்ந்த காட்டுப் பகுதிக்கு சென்று விடுவதாக கூறப்பட்டு வந்தது

இந்தக் கூற்றை உறுதிப்படுத்துவது போல் சிலவருடங்களின் முன்னர் 9 வகை காவலர்களைக் கடத்தியதையும் அதற்கு முந்தைய ஆள்கடத்தல்களையும் வீரப்பன் ஜூலை மாதப்பகுதிகளிலேயே நடத்தியிருந்தான்.

இதேபோல் ராஜ்குமார் உள்ளிட்ட 4 பேரையும் ஜூலை மாதத்திலேயே கடத்தியிருந்தான்.

ஆகவே இனிவரும் மழைக் காலத்தில் பாதுகாப்புத் தேடிக்கொள்ளவே இந்தக் கடத்தலையும் அவன் செய்திருப்பதாகக் கூறப்பட்டது.

தனது நிபந்தனைகளில் ஒன்றுகூட நிறைவேற்றப்படாமல், பணம் எதுவும் கைமாறாமல் ராஜ்குமாரை வீரப்பன் விடுதலை செய்ததாகக் கூறுவதை நம்பமுடியவில்லை என அவனைப்பற்றி அறிந்த செய்தியாளர்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தில் வீரப்பனால் கடத்தப்பட்டவர்களை விடுவிக்க பெரும் தொகைப்பணம் அவனுக்கு ரகசியமாகத் தரப்பட்டதாகக் கூறப்பட்டது. அப்போதைய அரசு இதனை மறுத்த போதும் பின்னர் காட்டுக்குச் சென்ற கோபாலிடம் வீரப்பன் பணம் பெற்றுக் கொண்டே தான் பணயக் கைதிகளை விடுவித்தாகக் கூறியிருந்தான்.

பழைய நிகழ்வுகளையும் வீரப்பனின் சுபாவத்தையும் இணைத்துப் பார்க்கும் செய்தியாளர்கள் ராஜ்குமாரை விடுவிக்க வீரப்பனுக்கு பணம் தரப்பட்டிருக்க வேண்டும் என்பதை மறுப்பதற்கில்லை என்றே கூறுகின்றனர்.

இதைத்தவிர கோடீஸ்வரரான ராஜ்குமாருக்கோ கன்னட திரையுலகில் முன்னணி நடிகர்களான அவரது 3 மகன்களுக்கோ வீரப்பனுக்குப் பணம் தருவது தலைபோகிற காரியமில்லை.

அத்துடன் ராஜ்குமாரின் மனைவி பர்வதம்மா மற்றும் அவரது மகன்கள் தமிழக முதல்வர் கருணாநிதியைச் சந்தித்த பின்னரே தூதுக் குழுவில் கோபாலுடன் நெடுமாறன் உள்ளிட்ட மூவர் சேர்க்கப்பட்டதைச் சுட்டிக் காட்டும் செய்தியாளர்கள் இதுவரை நடந்த அனைத்துச் சம்பவங்களுமே ராஜ்குமார் கடத்தலின் மூலம வீரப்பன் தான் நினைத்ததை மீண்டும் ஒரு முறை சாதித்து விட்டதைக் காட்டுவதாகவே தெரிவிக்கின்றனர்.

★

# யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை.

## வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்-2001

கீழே குறிப்பிட்டுள்ள வழங்கல்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு யாழ். பல்கலைக்கழகத்துடன் தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள்/ உற்பத்தியாளர்கள்/ ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் 2000 டிசெம்பர் 15 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

### வழங்கல்கள்

01. எழுதுபொருள்கள்.
02. புத்தகங்கள் பருவ வெளியீடுகள் ஏனைய வெளியீடுகள்
03 அலுவலக தளபாடம் — மரம்
04. அலுவலக உபகரணங்கள் (ஸ்ரீல் அலுமாரி, கபினட்டுகள் முதலியன)
05. அலுவலக இயந்திரங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள், பிரதி பண்ணும் இயந்திரங்கள், போட்டோக் கொப்பி இயந்திரங்கள் முதலியன).
06. சகல வகையான ஹாட்வெயர் பெயின்டுகள், வாணிஸ் உட்பட.
07. இயந்திரக் கருவிகளும் உதிரிப்பாகங்களும்.
08. மின்சாரசாதனமும் உதிரிப்பாகமும்
09. வெட்டும் கருவிகளும், மண் பாண்டங்கள் உட்பட சமையலறைப் பாத்திரங்கள்.
10. ஜவுளிகள் ஜன்னல் திரைச் சீலைகள், சீருடைத் துணிகள் முதலியன.
11. ஆய்வுகூட சாதனங்கள்.
12. இரசாயனப் பொருள்களும் கண்ணாடிப் பொருள்களும்.
13. மரங்கள் — தீராந்தி, பனைமரம், சலாகைகள்.
14. கட்டடப் பொருள்கள் (மணல், செங்கல், உலோகம், சுண்ணாம்பு முதலியன).
15. தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பங்கள் முதலியன.
16. டயர், ரியூப்புகள், பற்றரிகள்.
17. மோட்டார் உதிரிப்பாகங்கள் துணை உறுப்புகள்
18. ஆயுள்வேத மருந்துகள்.
19. மருந்துகளும்மருத்துவ வழங்கல்களும்
20. விளையாட்டு மற்றும் நலன்புரிப் பொருள்கள்.
21. தீயணைப்புச் சாதனங்களும் பாதுகாப்புச் சாதனங்களும்.
22. மழைக்கோட்டுகள், சேறுச் சப்பாத்துக்கள், குடைகள், சப்பாத்துக்கள் முதலியன.
23. பைப்புகள் பைப் இணைப்புகள்.
24. பிளாஸ்டிக், பைபர் கிளாஸ் உற்பத்திகள்
25. மட்பாண்டப்பொருள்கள், கண்ணாடிப் பொருள்கள், கண்ணாடிகள்.
26 தோட்ட வேலைகளுக்கான பசளைகள் இரசாயனங்கள் கருவிகள்.
27. கணனி உட்பட எலக்ரோனிக் பொருள்கள்.
28. கணனி மேசை கதிரைகள்.

### சேவைகள்

01. அச்சிடுதல், புளொக் செய்தல், றப்பர்ஸ்டாம்புகள், திகதி ஸ்டாம்புகள்.
02. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், புகைப்படப் பிரதி பண்ணும் இயந்திரங்கள், பக்ஸ், கொம்யூட்டர், மின் தட்டச்சு இயந்திரங்கள்) திருத்த வேலைகள்.
03. குளிர்சாதனப் பெட்டிகள், எயர் கொண்டிசனர்கள் திருத்த வேலைகளும் பராமரிப்புகளும்.
04. ஸ்ரீல் தளபாட திருத்த வேலை
05. மரத் தளபாடதிருத்த வேலைகள்.
06. கதிரைகள் பின்னுதல்.
07. உடைகள், கதவு யன்னல் திரைச் சீலைகள் தைத்தல்.
08. பெயர்ப் பலகைகள் வரைதலும், பிளாஸ்ரிக் பெயர்ப் பலகைகள் செய்தலும்.
09. உடைகளைச் சலவை செய்தல்.
10. புத்தகங்களையும் பருவ வெளியீடுகளையும் பைன்டிங் செய்தல்.
11. மோட்டார்வாகனங்கள்திருத்துதல்

### எந்திரவியல் சேவைகள்

01. மின் மோட்டர்கள், மின் விசிறிகள் ஜெனரேற்றர்கள் திருத்துதல்.
02. குடிசார் எந்திரவியல் வேலைகள் (கட்டடங்கள் நிர்மாணித்தலும், திருத்த வேலைகளும்).

★ இச் சேவைகளுக்கு மட்டும் ICTAD பதிவின் பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. மின்சார வயரிங் வேலைகள்.
04. நீர்விநியோகவடிகாலமைப்புவேலைகள் மற்றும் திருத்த வேலைகள்.
05. இரும்பு கிறில்கள்/ கேற்றுக்கள் உருவமைத்தல் பொருத்துதல்.
06. கட்டடங்கள் / கட்டட சேவைகள் அவற்றுடன் தொடர்புடைய இயந்திர சாதனங்களுக்கான உசாதுணை சேவைகள்.
07. நிலையாகப் பொருத்தப்பட்ட மரத் தளபாடங்கள் வழங்கல்/ பொருத்துதல்.
08. எந்திரவியல் சார் வரைதலும் நீலப் பிரதி செய்தலும்.
09. கறையான்/ பீடைகள் ஒழிப்பு வேலைகள்.
10. அலுமினிய கதவு/ சாளரம்/ சீலிங் பிரிப்புகள் வழங்குதலும் பொருத்துதலும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வழங்கல்கள் சேவைகள் 2001'' எனக் குறிப்பிட்டுப் பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1. வழங்கல்களுக்கும் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்.
2. எந்திரவியல் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் வேலைகள் பொறியியலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், த பெ. இல. 57, யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல்/சேவைக்கும் தனித்தனியான விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொருவிண்ணப்பத்துடன் பதிவுக் கட்டணமாக 200 ரூபா பெறுமதியான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்குப் பெறப்பட்ட காசுக் கட்டளை/தபாற் கட்டளையையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்

விலைமனுக்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் வேறிடங்களிலிருந்து விலைமனுக்களைக் கோரப் பல்கலைக்கழகத்திற்கு உரிமையுண்டு.

கோரப்படும்போது விலைமனுக்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்குப் பொருள்கள் / சேவைகளை வழங்கத்தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள்/சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன் அறிவித்தலின்றிப் பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவல்களைக் கொண்டிருக்க வேண்டும்.

1 விண்ணப்பிக்கும் வழங்கல்/சேவை
2 பெயரும், விலாசமும்
3. தொலைபேசி இலக்கம்.
4. வியாபாரப் பதிவின் இலக்கமும் திகதியும்.
5. வியாபாரத்தின் தன்மை.
6. வங்கியாளர்களின் பெயர்
7. கிடைக்கக்கூடிய கடன் வசதிகள்.
8. ICTAD பதிவு இலக்கம்/புத்தக இலக்கம் (எந்திரவியல் சேவை 2 இற்கு மட்டும்)

**குறிப்பு:**

எந்திரவியல் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்களிடம் இருந்து பின்வரும் மேலதிக தகவல்கள் கோரப்படுகின்றன.

அ. விண்ணப்பதாரர் யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் வேலைகளைச் செய்ய ஆர்வமாயிருந்தால் அதுபற்றி விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும். அத்துடன் அம்மாவட்டத்திலுள்ள தமது கிளை/பிரதான காரியாலய விலாசம், அம் மாவட்டத்திற்குரிய வியாபாரப் பதிவு அத்தாட்சியுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

ஆ. உங்கள் ஸ்தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவியலாளர், கட்டடக் கலைஞர் ஆகியோரின் பெயர், அனுபவங்களை (எந்திரவியல் சேவைகள் இலக்கம் 6 ற்கு மட்டும்) தருக.

★ சேவைகள்/வழங்கல்களுக்கான கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவு செய்யும் பெயரிலேயே வழங்கப்படும்

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

(சி/13698)

---

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை,

சுன்னாகம்.

## வாகன மிருகவரித் தகடுகள் - 2001 செய்து வழங்குவதற்கான கூறுவிலை கோரல்

2001 ஆம் ஆண்டுக்குரிய வாகன மிருகவரித் தகடுகள், இதன்கீழ் சொல்லப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாகச் செய்து வழங்குவதற்கான கூறுவிலைகள் எதிர்வரும் 2000 — 11 — 30 ஆம் திகதி வியாழக் கிழமை நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கூறுவிலைகள் ''தலைவர், வலி. தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்'' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

### நிபந்தனைகள்

1. துவிச்சக்கரவண்டித் தகடு:- இது 3'' நீளம், $1\frac{1}{2}$'' அகலம் கொண்டதாக அமைதல் வேண்டும். 2001, வ. தெ. பி. ச. து. வ. என்ற எழுத்துக்கள் தொடர் இலக்கம் என்பன தகட்டில் மிகத் தெளிவாகப் பதிக்கப்படல் (EMPOSE) வேண்டும்.
2. மாட்டுவண்டித்தகடு:- இது 4'' நீளம், 3'' அகலம் கொண்டதாக அமைதல் வேண்டும். 2000, வ தெ பி. ச. மா. வ. என்ற எழுத்துக்கள். தொடர் இலக்கம் என்பன தகட்டில் மிகத் தெளிவாகப் பதிக்கப்படல் (EMPOSE) வேண்டும்.
3 தகட்டின் இடது பக்க மேல் மூலையில் துவாரம் இடப்படல் வேண்டும்.
4. ஒவ்வொரு தகட்டின் மேற்புறமும் சிவப்பு வர்ணத்தால் பூசப்படல் வேண்டும்.
5. துவிச்சக்கர வண்டித் தகடுகள் 7500 உம், மாட்டு வண்டித் தகடுகள் 50 உம் செய்து வழங்கப்படல் வேண்டும்.
6. மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

க. நவநீதன்
(தலைவருக்காக)
உபதலைவர்
வலி. தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

(சி-13848)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



காலஞ்சென்ற இளைப்பாறிய அதிபர்
உயர் சைவத்திரு. இரா செல்வராசா J. P.
அவரது அன்பு மனைவி

## திருமதி செல்வராசா - அன்னலெட்சுமி

தோற்றம் 02 — 05 — 1922
மறைவு 18 — 10 — 2000

உங்கள் ஆத்ம சாந்திக்காக
கொழும்புத்துறை உப்புக்குளம் ஆத்தியம்பதி
ஸ்ரீ விநாயகப் பெருமானை
வேண்டுகின்றோம்!

கடந்த 18 - 10 - 2000 புதன்கிழமை சிவபதம் அடைந்த செல்வராசா அன்னலெட்சுமி அவர்களின் மரணவீட்டில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் கடிதமூலமும், தொலைபேசி மூலமும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு—

இன்று [17 - 11 - 2000] வெள்ளிக்கிழமை நடைபெற உள்ள அன்னாரின் வீட்டுக்கிருத்தியத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

— குடும்பத்தினர்

தற்போதைய முகவரி:
திருமதி செல்வநாயகி
முருகானந்தம்,
நவாலி கிழக்கு,
முருகமூர்த்தி கோயிலடி,
மானிப்பாய்.

நிரந்தரமுகவரி:
திருமதி செல்வநாயகி
முருகானந்தம்,
527, கொழும்புத்துறை
கிழக்கு.
யாழ்ப்பாணம்.

(சி/13843)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## யா/கோண்டாவில்

இந்து மகா வித்தியாலய அதிபர்

## செல்வி பா. மார்க்கண்டு

அவர்கள் அதிபர்கள் சேவைதரம் (I) ஒன்றுக்குப் பதவி உயர்வு பெற்றதையிட்டு அவரைப் பாராட்டுவதுடன் இன்னும் பல உயர்பதவிகள் பெற்று மேன்மேலும் உயர்வடைந்து நீடூழிவாழ ஞான வைரவப்பெருமானின் நல்வருள் வேண்டிப்பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அமிர்தலிங்கம் குடும்பத்தினர்

குமரகோட்டம்,
கோண்டாவில். (80607)

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுன்னாகம்

## வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும்

# பதிவு செய்தல் - 2001

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருள்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள்/ உற்பத்தியாளர்கள்/ ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 15 - 12 - 2000 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

## பொருள்கள்

01. காகிதாதிகள், எழுதுபொருள்கள்
02. அலுவலக உபகரணங்கள்.
03. மேல்நாட்டு வைத்திய உபகரணங்கள்
04. சித்த மருத்துவ மூலிகைகள், மருந்துகள்
05. கோலவுடைத்துணிகள், யன்னல் துணிகள், ஏனைய துணிகள்.
06. பாதணிகள், மழைக்கவசம் மற்றும் தோற் பொருள்கள்
07. தும்புத்தடி, விளக்குமாறு, நார்க்கடகம் முதலியன.
08. சுத்திகரிப்புப் பிரிவுக்கான கிருமிநாசினிகளும் மருந்துகளும்
09 வேலைப்பகுதி/ சுத்திகரிப்புப்பகுதிக்குத் தேவையான மண்வெட்டி, அலவாங்கு, பிக்கான் போன்றன.
10. நூலகங்களுக்குரிய நூல்கள்
11. கட்டடப் பொருள்கள் (சிமெந்து, கூரைத்தகடு, ஓடுகள் முதலியன)
12. தீந்தைகள், நிறந்திட்டும் பொருள்கள் முதலியன
13. கற்கள், மணல்கள்
14. வாகன இயந்திர உதிரிப்பாகங்கள், துணை உறுப்புக்கள்
15. வாகனங்களுக்கான பற்றரிகள், ரயர், ரியூப் முதலியன

## சேவைகள்

01. அச்சிடுதல், புத்தகங்கள் கட்டுதல்
02. தட்டச்சு இயந்திரம் திருத்தம்
03. மோட்டார் வாகனங்கள் திருத்தம்
04. இறப்பர் முத்திரை தயாரித்தல், புளொக் தயாரித்தல்
05. கோலவுடை தைத்தல்
06. வாகனங்கள் சேவிஸ் செய்தல்.

கடித உறையில் இடதுபக்க மேல்மூலையில் 'வழங்கல்கள் சேவைகள் 2001 ஆம் ஆண்டெனக் குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

வழங்கல்களுக்கும் சேவைகளுக்குமான விண்ணப்கள் 'தலைவர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுன்னாகம்' என முகவரியிடப்பட வேண்டும். ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனியான விண்ணப்பம் அனுப்பப்படவேண்டும்.

ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பதிவுக் கட்டணமாக ரூபா 100 பெறுமதியான தலைவர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் என்ற பெயருக்கு பெறப்பட்ட காசுக்கட்டளை/ தபாற் கட்டளையை இணைத்து அனுப்ப வேண்டும். பணமாகச் செலுத்த விரும்புபவர்கள் எமது பிரதேச சபையின் பணிமனையில் நேரடியாகச் செலுத்த முடியும்.

கூறுவிலைகள், பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கோரப்படும் ஆயினும் வேறு இடங்களிலிருந்து கூறுவிலைகள் கோரவும் பிரதேச சபைக்கு உரிமை உண்டு.

கோரப்படும்பொழுது கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்குப் பொருள்கள்/ சேவைகள் வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள்/ சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றிப் பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

க. நவநீதன்
(தலைவருக்காக)
உபதலைவர்,
வலி.தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
2000 - 11 - 13 (சி/13850)

## தாச்சிப் போட்டி

வடமாகாண தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் மானிப்பாய் ஆனந்த விளையாட்டுக்கழகம் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ள ஆட்டத்தில் பங்குபற்றும்அணிகள்வருமாறு

மயிலிட்டி பாடும் மீன் விளையாட்டுக்கழகம் எதிர் தையிட்டி ஈஸ்வரி விளையாட்டுக்கழகம். (ஐ-86)

# தேவை

மின்சார உதிரிப்பாக விற்பனை நிலையத்தில் விற்பனையாளராகப் பணியாற்றுவதற்கு கணிதம், ஆங்கில அறிவுள்ள பெண்கள் தேவை. மாநகரசபை எல்லைக்குள் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:-

விள. இல. 1139, மே/பா உதயன்.

80603)

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை. சுன்னாகம்.

## வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல்

0'. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:- 17. 11. 2000—28 11. 2000 பி. ப. 2. 00 மணி வரை.
02. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:—29 11. 2000 ந ப. 12. 00 மணி வரை.
03. கேள்விப்பத்திரம் திறந்து பார்க்கப்படும் திகதி: —29. 11. 2000 பி. ப. 3. 00 மணி.
04. ஒவ்வொரு வேலைக்கும் அதற்கெதிரே காட்டப்படும் மீளளிக்கப்படும், மீளளிக்கப்படாத கட்டணங்களைச் செலுத்துபவர்களுக்கு மட்டுமே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்விப்பத்திர வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் |
|---|---|---|
| 01. சங்குவேலி காசியம்பிரிவு வீதி திருத்தம் | 180.00 | 100.00 |
| 02. சிறீலங்கா வீதி கற்கள் இட்டு தார் ஊற்றுதல் | 2300.00 | 200.00 |
| 03. உடுவில் மகளிர் கல்லூரி வடக்கு வீதி புனரமைப்பு | 2900.00 | 300.00 |
| 04. தம்புவத்தை சவரோடை விவசாய வீதி கிளை ஒழுங்கை புனரமைப்பு | 1850.00 | 200 00 |
| 05. உடுவில் அரசினர் மருந்தக வீதி திருத்தம் | 1500.00 | 200.00 |
| 06. காந்தரூபன் சனசமூக நிலைய குழாய்க் கிணறு புனரமைப்பு | 180.00 | 100.00 |
| 07. கல்லாக்கட்டுவன் பேச்சி அம்மன் கோயிலடி குழாய்க்கிணறு புனரமைப்பு | 180 00 | 100.00 |
| 08. மாடுகள் கட்டிப் பராமரிக்கும் கொட்டகையைச் சுன்னாகம் பொதுச் சந்தையில் அமைத்தல் | 225.00 | 100.00 |
| 09. புனித அந்தோனியார் சேமக்காலை புனரமைப்பு—கொத்தியாலடி | 1500.00 | 200.00 |

குறிப்பு:-

திணைக்களங்களில் பதிவு செய்த ஒப்பந்தகாரர்களுக்கு மட்டும் வீதிகளுக்குரிய கேள்விப் படிவங்கள் வழங்கப்படும்

க. நவநீதன்
(தலைவருக்காக)
உபதலைவர்.
வலி. தெற்குப் பிரதேச சபை,
சுன்னாகம்.

வலிகாமம் தெற்குப் பிரதேச சபை,
சுன்னாகம். (சி/13849)

# நினைவலைகள்

## முதலாம் ஆண்டு — 2 ஆம் ஆண்டு





திருமதி
**பிள்ளையான் சரஸ்வதி**

தோற்றம் 08—04—1930 மறைவு 28—11—1999
திதி:- 17—11—2000

அமரர்
**பிள்ளையான் சிவபாலசுந்தரம்**
M. Sc Mech. Eng. (Lond.)

தோற்றம் 21—10—1948 மறைவு 18—11—1998
திதி:- 24—11—2000

ஓடி விட்ட ஓராண்டின் உம் நினைவு ஓயவில்லை
பாசம் தந்து வளர்த்த எங்கள் அன்புத் தாயே ஏங்குகின்றோம்.
உங்கள் இருவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:

குடும்பத்தினர்

வே. பிள்ளையான்,
'சரஸ்வதி வாசம்',
மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய். (80498)

யாழ்.
பல்கலைக்கழகம்

## கேள்விப் பத்திர அறிவித்தல்

### மர/உருக்குத் தளபாடங்களை வழங்கல்

யாழ். பல்கலைக்கழகத்திற்கு பின்வரும் மர/ உருக்குப்பொருள்களை வழங்குவதற்குத் தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | விரிவுரை மண்டபக் கதிரை | 100 |
| 2. | பக்க ராக்கை | 07 |
| 3. | ஆய்வு கூட ஸ்ரூல் | 170 |
| 4. | கைக் கதிரை | 23 |
| 5. | காரியாலய மேசை | 19 |
| 6. | உருக்கினாலான அலுமாரி (Steel Cupboards) | 68 |
| 7. | கோவை அலுமாரி (உருக்கிலான) (Steel Filing Cabinets) | 60 |
| 8. | உருக்கிலான புத்தக ராக்கை | 50 |

கேள்விப்பத்திரதாரர் மீளளிக்கத் தகாத வைப்புப் பணமாக ரூபா 500 உம் மீளளிக்கும் வைப்புப்பணமாக ரூபா 5000 மும் நிதிக்கிளையில் காசாகச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் நிதியாளருடன் தொடர்பு கொண்டு, கேள்விப்பத்திர ஆவணங்களை அலுவலக நேரத்தில் 20-11-2000 ஆம் திகதி தொடக்கம் 29-11-2000 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தியாக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள், நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட்டு 07-12-2000 பிற்பகல் 2.00மணிக்கு முன்பதாக பதிவுத்தபால் மூலமாகவோ அன்றி நேரடியாகவோ சமர்ப்பிக்க வேண்டும். கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் ''மர/ உருக்குத் தளபாட கேள்விப்பத்திரம்'' எனக் குறிப்பிடல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அன்றையதினம் பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சபை அறையில் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.

**பதிவாளர்**
யாழ். பல்கலைக்கழகம். (சி/13846)

## பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ. 17

தேசியக் கல்வி நிறுவகத்தின் ஏற்பாட்டில் நாளை நடைபெற இருந்த கணனிப் பிரயோகவியல் தேசிய தராதரப்பத்திரப் பரீட்சை திகதி குறிப்பிடப்படாது ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக யாழ். மத்திய கல்லூரி அதிபர் க. இராஜதுரை அறிவித்துள்ளார்.

பரீட்சைக்கான வினாத்தாள்கள் எடுத்துவரப்படாததை அடுத்தேபரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## கல்வியியல் கல்லூரியில் சாரணியப் பாசறை

வலிகாமம் தெற்கு, நவ. 17

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி ஆசிரிய பயிலுநர்களால் முதன் முறையாக சாரணர் பாசறை விழா இன்று முதல் மூன்று தினங்களுக்கு கல்லூரி வளாகத்தில் நடத்தப்பட உள்ளது.

சாரணிய செயற்பாடுகள் பாடசாலைகளில் சிறப்பாக நடைபெறுவதற்கு பயிற்றுவிக்கும் நோக்குடனும், சாரணியம் சகல பாடசாலைகளிலும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற நோக்குடனும் இப்பாசறை விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி. கமலநாதனின் வேண்டுகோளின் பேரிலும், யாழ்ப்பாண மாவட்ட சாரணர் ஆணையாளர் எஸ் சௌந்தரராயனின் வழிகாட்டலுடனும் ஆசிரிய பயிலுநர்களால் சாரணர் பாசறைவிழா 17, 18, 19 ஆம் திகதிகளில் நடத்தப்பட உள்ளது.

(ஐ-152)

## ஆங்கில ஆசிரியர் போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ். கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் கற்பிப்பதற்கு விண்ணப்பித்த பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப்பரீட்சை எதிர்வரும் 22 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளது.

இவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி எஸ். மகாலிங்கம் தெரிவித்தார்.

(ஐ-6)

## அமரர் பேராசிரியர் அ. துரைராசா
அவர்களினதும்
## அமரர் வே. ந. சிவராசா
அவர்களினதும்
## 67 ஆவது
## பிறந்தநாள் நினைவுரைகள்

இன்று (17 - 11 - 2000) வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணிக்கு துணைவேந்தர் தலைமையில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

**நிகழ்வுகள்**

1. வாழ்த்துரை: திரு க. கனகரத்தினம்
(பதில் நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம்)
2. தலைமையுரை:
பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)
3. நினைவுரைகள்:
**பேராசிரியர் அ. துரைராசா நினைவுரை**
பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி)
(முன்னாள் மருத்துவ பீடாதிபதி,
யாழ். பல்கலைக்கழகம்)
**வே.ந சிவராசா நினைவுரை**
பேராசிரியர் சுப்பிரமணியம் பவானி
(சித்த மருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
4. நன்றியுரை: பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்
(தலைவர், இந்து நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(80601) விழா அமைப்புக்குழு

## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி நகரசபை முன்னாள் தலைவரும்,
தினகரன் பத்திரிகை நிருபரும்.
அகில இலங்கை சமாதான நீதிவானும் ஆகிய

### கந்தையா மயில்வாகனம்

அவர்கள் 14 — 11 — 2000 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார். அவரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகளுக்கும், உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இல. 1, வைமன் வீதி. ஆ. நகநேசன்
யாழ்ப்பாணம். (சி/13856)

## ஆறாம் மாத நினைவஞ்சலி



### திருமதி சங்கரபபிள்ளை அன்னபூரணம்

குருமராசித் தொண்டர்
கண்டிவீதி- சாவகச்சேரி

தோற்றம்: 07- 12- 1926
மறைவு: 24- 05- 2000

திதி:- 17- 11- 2000

உங்கள் ஆத்மா சாந்தியடைய
என்றும் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.
உசன், மிருசுவில். (80539)

## கேள்வி அறிவித்தல்

### பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், (மாகாணம்) யாழ்ப்பாணம்.

01. கீழ் வரும் வேலைக்கான கேள்விகள் யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலக கேள்விச் சபையினரால், மார்கழி மாதம் 6 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிவரை யாழ்ப்பாணம், பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
02. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் 'இக்ராட்' (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்குத் தரம்எம் — 9 இலும் சுன்சது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட] ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவார்.
03. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை நிறைவேற்று எந்திரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம், 537, சிவன் கோயில் வீதி, திருநெல்வேலி தெற்கு திருநெல்வேலியில் அமைந்துள்ள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்று, கேள்விப் பத்திரங்களை 2000 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 29 ஆம் திகதி பிற்பகல் 4 30 மணி வரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| வேலைகளின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம். | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம். |
|---|---|---|
| 1. யாழ்ப்பாணம், மாகாண பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பணிமனையில் களஞ்சியப் பாவனைக்கான பிரிப்புச் சுவர் அமைத்தல். | ரூபா 1,400 | ரூபா 250 |
| 2. கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மிகுதி வேலைகள் பூர்த்தியாக்குதல். | ரூபா 5 600 | ரூபா 500 |

05. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.
06. இவை தொடர்பான மேலதிக விவரங்களை நிறைவேற்றுப் பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம், மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையில் தற்காலிகமாக அமைந்துள்ள காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

இ. சிறிகாந்தா
பிரதம பொறியியலாளர்,
யாழ்ப்பாணம்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்),
திருநெல்வேலி. யாழ்ப்பாணம்.
16 — 11 — 2000 (சி/13857)

உதயன்

## வழிக்குக் கொண்டு வர...

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் பெருவிருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளதை அனைத்துலக நாடுகள் பலவும் ஆர்வத்துடனும் அக்கறையுடலும் நோக்குகின்றன.

இலங்கைக்கு அடுத்த வாரம் விஜயம் செய்யவுள்ள பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹெய்ன் வெளியிட்டிருக்கும் கருத்து அதற்குச் சான்று.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில், நோர்வே நாடு மூன்றாந்தரப்பு அனுசரணையாளராக நின்று சமாதான முயற்சிகளை மேற்கொள்ளும் பணிகளுக்குப் பக்கத் துணையாகச் செயற்படுவதற்கு— அரசும் புலிகளும் கேட்டுக் கொண்டால்— பிரிட்டன் தயார் என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

நோர்வேயின் முயற்சிகளை அமெரிக்காவும் இந்தியாவும் ஏற்கனவே வரவேற்றுள்ளன. பல ஐரோப்பிய நாடுகள் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய ஒன்றியமும் நோர்வேயின் முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

ஆனால் இலங்கை அரசாங்கமோ, இதுவிடயத்தில் மெல்ல மெல்ல அடி வைத்து நகருமோ என்பது கூடச் சந்தேகமாக உள்ளது. விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை நடத்துவதில் உண்மையான ஆர்வம் கொண்டவர்களா என்பதனைத் துருவி ஆராய்வதே அதன் இப்போதைய வேலையாக இருக்கிறது.

அதுமட்டுமன்று. தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளிவிடுவது போலவே அரசாங்கம் செயற்படுவதாகத் தோன்றுகிறது. நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு ஊக்கமளிக்காத விதத்தில் அரசாங்கத்திற்குள்ளேயே கருத்துக்கள் வெளிவிடப்பட்டு வருகின்றன. ஜனாதிபதி கூறுவது ஒன்றாகவும் பிரதமர் மற்றும் சில அரசாங்கப் பிரமுகர்கள் கூறுவன அதற்கு முரணாகவும் உள்ளன.

சமாதானப் பேச்சில் தலைவர் பிரபாகரனுக்கு உண்மையான ஆர்வம் உண்டென்பதனை நிருபிக்க வேண்டும். அதில் அவர் நேர்மையாக உள்ளார் என்பதனை வெளிப்படுத்துவதற்கு ஆயுதங்களைக் கீழே வைப்பதற்கு இணக்கம் தெரிவிக்க வேண்டும்— என்று இராணுவத் தளபதி கூறுமளவுக்கு கொழும்பின் ஆளுந்தரப்பின் சமாதான முயற்சிகள் குறித்த கருத்துக்கள் பல கோணப்பட்டுள்ளன.

இவை போதாது என்று சிஹல உறுமய மற்றும் அனைவா போன்ற பேரினவாத அமைப்புகள் (வழமை போல) நோர்வேயின் முயற்சிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கின்றன.

வெளிநாடுகளில் இருந்து நிதி உதவி பெறுவதற்கு சமாதான வேடம் அரசுக்கு மிகவும் இன்றி அமையாதது. அதனால் நோர்வேயின் சமாதான முயற்சிகளில் விருப்பம் இருப்பதாகக் காட்டவேண்டி உள்ளது. தமிழர்களுக்கு தன்னாட்சி உரிமை வழங்கினால் கூட, அரசியல் செல்வாக்குச் சரிக்கப்பட்டுவிடும் என்ற அச்சம்—குலைநடுக்கம்— அரசுக்கு அதனாலேயே ஆரம்பத்திலேயே இவ்வாறு ஒரு "தடுமாற்றம்".

இலங்கை அரசையும் அதன் தலைவர்களையும் ஏனைய தென்னிலங்கை அரசியல் தலைவர்களையும் தமிழர்களின் உரிமைகளை வழங்க வழிக்குக் கொண்டு வரும் 'ஊக்கி' வெளிநாடுகளிடமே உண்டு. நேரடியான சர்வதேச அழுத்தமே அது என்பதனை இலங்கை வரும் பிரிட்டிஷ் அமைச்சர் புரிந்து கொள்வார் என நம்புகிறோம்.

# இம்மையும் மறுமையும் தெளிந்து இறைபணி நிற்கும் அடியவர் பெருமை

"நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன்பணி செய்து கிடப்பதே"

என்பது திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய பாடல்களில் ஒன்று. இறைபணி நிற்றலின் இலக்கணம் பற்றி அறிய விரும்புமொருவர் இப்பாடலின் பொருளை அறிந்திருக்க வேண்டும்.

இறைவனுக்குத் தொண்டு செய்வதே அடியவர்களின் பணியாகும். அடியார்களைப் பாதுகாப்பதே பரமனின் பணியாகும் என்பதே இதன் பொருள் ஆகும்.

செந்தமிழ் சுந்தரர் தேவாரங்களிலே அதியுன்னதமானது திதிலாத திருத்தொண்டர் தொகையேயாகும். இத்திருத்தொண்டர் தொகையின் இறுதிப் பாடலிலே பணி செய்பவர்களின் வகைகள் நன்கு விளக்கமாவது நோக்குதற்குரியதாகும்.

"பத்தராய் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையேபாடுவா ரடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
திருவாரூர்பிறந்தார்க ளெல்லார்க்கு மடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்
அப்பாலு மடிசார்ந்த அடியார்க்கு மடியேன்
ஆரூரனாரூரி லம்மானுக காளே"

என்பது அத்திருப்பாடல்.

இத்திருப்பாடலிலே; "பத்தராய்ப் பணிவார்கள்" என்பதாலே உடம்பினாற் பணிசெய்வோரையும், 'பரமனையே பாடுவார்" என்பதனாலே வாயினாலே பாடும் பணியை மேற்கொண்டவர்களையும் "சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்" என்பதனாலே செம்மை பெற்ற உளத்தினாலே பணி செய்பவர்களையும் போற்றுகின்றார் சுந்தரர்.

தொண்டு / பணி என்பது, "எமக்குச் சிவன் தந்த பெரும்பேறு எனக்கருதி மெய்யன்பாலாகிய உளநெகிழ்ச்சியுடன் மேற்கொள்ளப்படவேண்டியதாகும். "எல்லாவற்றையும் நானே செய்கிறேன். வேறு யார் என்ன செய்கிறார்கள்?" என்று ஆலயத் தொண்டு செய்பவரொருவர் கருதமுற்படுவாரானால் அது; குளிப்பதற்காக குளத்திற்கேகிய யானையொன்று குளத்துமண்ணைத் தனது துதிக்கையால் வாரித் தன்தலையிற்போட்ட வாறானதேயாகும்.

தனியடியார் அறுபான்மூவர், தொகையடியார் ஒன்பதின்மர் ஆகிய எழுபானிருவர் வரலாறுகளைப் பக்திச்சுவை நனிசொட்டச் சொட்டப்பாடியருளியவர் தெய்வச் சேக்கிழார் சுவாமிகள். இவர் தாமருளிய நூலிலே "கூடும் அன்பினிற் கும்பிடலேயன்றி, மோக்ஷப் பதவியையே வெறுத்தொதுக்கிய சிவனடியார்களின் செயற்கருஞ்செயல்கள் ஒவ்வொன்றும் அவரவர் நிலையிலேயே அதியுன்னதமானதாகும்" என்ற பேருண்மையினைத் தடுத்தாட்கொண்ட புராணம் வாயிலால் விளங்குகின்றமை காணலாம்.

### ஞானக் கதிர்

இறைவரோ தொண்டர்தம் உள்ளத்து அடக்கமாயிருப்பவர் என்பது ஔவையார் கூற்று. இறைவனைத் தமது உள்ளக் கோயிலிலே குடிபுகச்செய்து, ஊனேயுருகும்படி இடையறா அன்பு வைத்து வழிபடுமடியவர்கள் இதயங்கலங்காத வண்ணம் சதாவதானமாகச் செயற்படுதல் மகத்தான பணியாகும்.

"ஈசனடியார் இதயங் கலங்கிடத்
தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசம தாகுமே நம் நந்தி ஆணையே" எனவும்,
"ஆண்டான் அடியவரார்க்கும் விரோதிகள்
ஆண்டான் அடியவர் ஐயமேற் றுண்பவர்
ஆண்டான் அடியாரை வேண்டாது பேசினோர்
தாந்தாம் விழுவது தாழ்நர காகுமே"

எனவும் வருகின்ற திருமந்திரப் பாடல்கள் இதனை வழிமொழியும்.

"இன்புறுமெந்தை இணையடி யேத்துவார்
துன்புறுவாரல்லர் தொண்டு செய்வாரே"

என்ற சம்பந்தப்பிள்ளையார் ஆணைமொழிகளைச் சரதமென்றுன்ச வினைதீரத் தொழுதலும், தொண்டு புரிதலுமே தக்கதாகும்.

தொண்டர்களை இவர் பெரியர், இவர் அற்பர் என மதிப்பிடுதல் ஆண்டான் தொழிலேயன்றி நம்போலிகளின் தொழிலன்றென்பதனை மனங்கொள்வோமாக! ★

— தொண்டன்

# சாயிபாபா பிறந்த நாளை ஒட்டி விசேட நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு

## பிரசாந்தி நிலையத்தில் உலக மாநாடு

கொழும்பு, நவ. 17

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 75 ஆவது பிறந்த தினக் கொண்டாட்டங்கள் எதிர்வரும்23 ஆம் திகதி புட்டபர்த்தி பிரசாந்தி நிலையத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. பகவானின் பிறந்த நாளையொட்டி அகண்டநாம பஜனையும் விசேட கூட்டுப பிரார்த்தனை நிகழ்வும் நடைபெறும்.

ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலைய உலக நாட்டுப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் 7 ஆவது உலகமாநாடு நவம்பர் 18 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை பிரசாந்தி நிலையத்தில் நடைபெறும். கடந்த செப்ரெம்பரில் நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கில் 78 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் மனித மேம்பாடு பற்றி ஆராய்ந்த விடயங்கள் இந்த மாநாட்டில் மீளாய்வு செய்யப்படும்.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவும் எதிர்வரும் நவம்பர் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது அத்துடன் நவம்பர் 19 ஆம் திகதி பிரசாந்தி நிலையத்தில் பெண்கள் தினம் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் அருள் நெறித் தொண்டர் கே. கே. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

# தென்மராட்சி வலயப் பாடசாலை அதிபர்களுக்கு

யாழ்ப்பாணம், நவ 17

தென்மராட்சி வலயப் பாடசாலை அதிபர்கள் அனைவரையும் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நெல்லியடி ம.ம.வித்தியாலயத்தில் இயங்கும் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்துக்குச் சமுகமளித்து திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளரைச் சந்திக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். குணநலவள உள்ளீட்டுக் கணக்கை வங்கியில் திறப்பது தொடர்பான உரிய ஆவணங்களை உடன் எடுத்து வருமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

### நாளை

கார்த்திகை 3
சனிக்கிழமை
திதி: ஸப்தமி
பிற்பகல் 1.35 வரை.
நட்சத்திரம்: ஆயில்யம்.
முன்இரவு 8.04 வரை
சுபநேரம்: 3 09 — 4 39
ராகுகாலம் 9 09 —10 39
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# விக்னேஸ்வர வித்தியாலய மாணவருக்கு

வலிகாமம் தெற்கு, நவ. 17

கைதடி விக்னேஸ்வர வித்தியாலயத்தில் இருந்து ஜி.சி.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்ற உள்ள மாணவ, மாணவிகள் அனைவரையும் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் இயங்கும் மேற்படி பாடசாலையில் வந்து தன்னைச் சந்திக்குமாறு அதிபர் மா. து. பாலசுந்தரம் கேட்டுள்ளார்.

(ஐ-152)

# கிழக்கு முஸ்லிம்களுக்கு புலிகள் வேண்டுகோள்

மட்டக்களப்பு, நவ 17

கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல் பிரிவினர் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

'முஸ்லிம் சமூகத்தைப் பலிக்கடாவாக்க நினைக்கும் சிங்களப் படையினர்' என்ற தலைப்பில் அந்த அறிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது

தமிழ் - முஸ்லிம் மக்களிடையே பிளவை ஏற்படுத்தி சிங்களப் பேரினவாதம் தனது காரியத்தை வெல்லலாம் என்ற தொடர்ச்சியான சூட்சுமத்தை செய்து வருகிறது எனவே சிங்கள பேரினவாதத்தின் இவ்வாறான ஒவ்வொரு கபட நடவடிக்கைகளின் போதும் முஸ்லிம் சகோதரர்கள் விழிப்புடனும் அவதானத்துடனும் இருக்கவேண்டும்.

முஸ்லிம்கள் தற்கால நிலைமையை நன்கு புரிந்துகொண்டவர்கள் என்பதையும் அவர்கள் ஒன்றும் அரசியல் குருடர்கள் அல்லர் என்பதையும் படையினர் முதலில் நன்கு புரிந்து கொள்ளட்டும் இத்தோடு தாம் விரிக்கும் வலையில் முஸ்லிம் மக்கள் விழுந்துவிடமாட்டார்கள் என்பதையும் படையினர் நன்கு தெரிந்துகொள்ளட்டும்.

படையினர் சில நாள்களுக்கு முன்பு மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளுக்கு உதவுவதை விடுத்து அவர்களை ஒழித்துக்கட்ட படையினருடன் இணைய வேண்டுமெனக் கேட்டுக் கொண்ட போது முஸ்லிம் சகோதரர்கள் இது குறித்து அலட்டிக்கொள்ளாது விட்டதன் மூலம் படையினருக்கு நல்ல பாடம் புகட்டிவிட்டனர் — என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-8-21)

# சாந்திகம் மீண்டும் பழைய இடத்தில்

வலி வடக்கு, நவ. 17

கடந்த காலங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்களைத் தொடர்ந்து இணுவில் தனியார் வைத்தியசாலைக் கட்டடத்தில் இயங்கிய சாந்திகம் உளவளத் துணை நிலையம் மீண்டும் கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள அதன் முந்திய அலுவலகத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

எனினும் அலுவலகத்தின் ஒரு பிரிவு இணுவிலிலும் இயங்கி வருகின்றது. (ஐ-86)

### உதயவாக்கு

சம்பந்தமில் வாதுவறைப் பேசுபவன் தனக்கு விருப்பமில்லாதவற்றைக் கேட்க நேரிடும்.

—துருக்கியப் பழமொழி

# விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

ஆயுள்வேத மருத்துவ அதிகாரி பதவிக்கான விண்ணப்ப முடிவு திகதி இம் மாதம் 30 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பதவிக்கான விண்ணப்ப முடிவு திகதி ஒக்ரோபர் 27 என்று அரச வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்திற்கு இந்த வர்த்தமானி இதுவரை கிடைக்காத காரணத்தினால் பலர் இப்பதவிக்கு விண்ணப்பிக்கவில்லை.

இது தொடர்பாக சுதேச வைத்திய அமைச்சுக்கு சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து விண்ணப்ப முடிவு திகதியை மேற்படி அமைச்சின் மேலதிக செயலாளர் நீடித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

குருநகரைச் சேர்ந்த செல்வி இராஜினி றொமில்டா இராஜநாயகம் என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல.0901021832) 14-11-2000 அன்று குருநகர் ஓடக்கரை வீதியில் தவறிவிட்டது. தயவுசெய்து அதனைக் கண்டெடுத்தவர்கள் நியு,பிறைற் கல்வி நிலையம், யாழ். மாட்டின்வீதி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். **(T.P. - 2578, 3385)** (80594)

**41/1B,** ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த றொமோல்ட் மேவின் குணராஜா என்பவரது விசேட அடையாள அட்டை (இல. 0901021913) 06-11-2000 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் அதிபர் அவர்களிடம் ஒப்படைக்கவும். (80580)

ஏழாலை மேற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்வகுமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, தொழில் அடையாள அட்டை என்பன யாழ். நகருக்கும் சுன்னாகத்திற்கும (**K.K.S.** வீதி) இடையில் 14-11-2000 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலயத்தில் ஒப்படைத்து உதவவும். (80570)

நடராஜா சுகுமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டை இல. (520692851v)யும், விசேட அடையாள அட்டை (இல.0905000300) யும் 11-11-2000 அன்று நாச்சிமார் கோயிலுக்கும் ஆனைக்கோட்டைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நவாலி உபதபாற் கந்தோரில் **(Sub-Post Office)** ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (80599)

## பொய்யாமொழி ஜோதிடம்

விவாகத்தடை, தொழில்தடை, கல்வித்தடை, பிரயாணத்தடை என்பன தீர ஆலோசனை வழங்கப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஜாதகத்துடன் வரவும். தொடர்பு: செவ்வாய், சனி ஆகிய நாள்களில் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி, நல்லூர். ஞாயிற்றுக் கிழமை - பழம் பிள்ளையார் கோயில் மடம், மல்லாகம்.

(80553)

## பணிப்பெண் தேவை

யாழ். இந்து மகளிர் கல்லூரிச் சுற்றாடலில் இருக்கும் வீட்டிற்குப் பணிப்பெண் தேவை. 40 வயதிற்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது. விளம்பர இல. 1135, மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(c/13834)

## A/L CHEMISTRY

**G.C.E. A/L** மாணவர்களுக்கு தனியாகவோ அல்லது குழுவாகவோ வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். தொடர்புகள்: 1) **218/1,** பலாலி வீதி, கந்தர்மடம் 2) **27/11,** புகையிரதக் கடவை, சுண்டுக்குளி. (80549)

## 2001 உங்களுக்கு எப்படி?

எங்கும் விற்பனையாகின்றது. வேலணை சோதிடர் **V.A.** சிவராசா வெளியிட்டது என்று கேட்டு வாங்குங்கள். சனீஸ்வர வக்கிர பலாபலன்கள், ஆங்கிலத்தில் கட்டுரைகள், அழகியல் (தரம்1-5வரை) என்பனவும் விற்பனையாகின்றன. சோதிடத்திற்கு நாடுங்கள்: 152**B**, அரசடி வீதி, கந்தர்மடம். (80579)

## அறிவித்தல்

**ஸ்ரீ கிருஷ்ணா தொலைத் தொடர்பு சேவை**

மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

T.P - 070-212411 - உள்நாடு

0094 - 70212411 - வெளிநாடு

பருத்தித்துறை வீதி,
சிறுப்பிட்டி.

*- உரிமையாளர்.*

(80596)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அன்னை மடியில்**
**30 - 06 - 1983**

**இறைவன் அடியில்**
**28 - 11 - 1999**

**செல்வன்**
**தயாபரன் குணரத்தினம் (ஜெகன்)**
(மீசாலை வீரசிங்கம் ம. வி. மாணவன்)

திதி: ஷஷ்டி 17 – 11 – 2000

**எங்கள் அன்புச் செல்வமே ஜெகன்!**
**எம்மை விட்டுப் பிரிந்து**
**ஓர் ஆண்டு சென்றது ஐயா!**
**துயர் தாங்காது துடிக்கின்றோம்**
**உன் நினைவு எங்கள் நெஞ்சங்களை**
**விட்டு அகலாது ஜெகனே!**

அன்னாரின் நினைவையொட்டி இன்று (17-11-2000) வெள்ளிக் கிழமை தொண்டமனாறு செல்வச்சந்நிதியில் மோட்ச அர்ச்சனையிலும் மணியம்மடத்தில் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினரை கேட்டுக்கொள்கிறோம்.

உன் பிரிவால்வாடும்:
**பெற்றோர், சகோதரர்,**
**குடும்பத்தினர்.**

நிரந்தர முகவரி:-
*மீசாலை வடக்கு,*
*கொடிகாமம்.*

தற்காலிக முகவரி:-
*வடலியடைப்பு,அரசடி,*
*பண்டத்தரிப்பு.*

(80370)

## SALE

புதிய மொடல் **COMPUTER STABI - GUARD, SONY 8 MP-120 VIDEO - 8 (Pb-120 MP3)** கெசட் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 154, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (80588)

## காணி விற்பனைக்கு

நவற்கிரி அச்சுவேலி வீதியில் நவற்கிரி மாதா கோயிலுக்கு அண்மையில் ஒரு பக்கம் றோட்டையும் இரண்டு பக்கம் ஒழுங்கையையும் கொண்ட சற்சதுரமான 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: க.சிவபாதசுந்தரமூர்த்தி, 55, சீனியர் லேன், கலட்டி அம்மன் கோயிலடி, யாழ்ப்பாணம்.

(80598)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள ஓட்டோவும் (202-), புதிய நீர் இறைக்கும் இயந்திரமும் **(ROBIN, EY-20)** விற்பனைக்குண்டு. தொடர்பு: கந்தையா, அரசடி அம்மன வீதி, திருநெல்வேலி.

(80600)

உ

## மிலேனியத்தில் அகவை ஐம்பது



**இன்று பொன் விழாக்காணும் எமது தலைவர்**

**திரு. கே. சி. கந்தசாமி**

(வடபிராந்திய போக்குவரத்துச் சபை காரைநகர் சாலை நடத்துநர்)

அவர்களை ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானின் அருள்பெற்றுப் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

**சோலையான் விளையாட்டுக்கழகம்,**
**லலிதா கலாமன்றம்,**
**வேதரடைப்பு கிராம அ.சங்கம்,**
**கலாநிதி ஆ. தியாகராசா ம.ம. வித்தியாலய அபிவிருத்திச் சங்கம்.**

காரைநகர். (c/13853)



உ
சாயிராம்

**கைதடி வடக்கைச் சேர்ந்த புராண விரிவுரையாளரும், சமய சமூக சேவையாளரும், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியருமான**

**அமரர்**

**சின்னத்தம்பி சரவணமுத்து**

**ஆசிரியர் அவர்கள்**

மக்களுக்கு சமைத்து வைத்த 'சமய வாழ்க்கை' என்னும் கட்டுரையை அவர் தெய்வீகம் அடைந்த மூன்றாம் ஆண்டு தினமான இன்று நினைவு கூர்ந்து வாசகர் முன் சமர்ப்பிக்கின்றோம்.

## சமய வாழ்க்கை

எல்லாப் பிறவிகளிலும் மேலான பிறவி மனிதப்பிறவி. மனிதனாய் இருக்கும் போதே வருங்காலப் பிறவி சுகமான, மேலானதாய் இருக்க நாம் ஒவ்வொருவரும் முயல வேண்டும். மற்றைய ஆன்ம கோடிகளுக்கில்லாத மேலான நிலையை இறைவன் படைத்தனன் என்ற கருணையோடு நமது வாழ்க்கையை நடத்துவதே மனிதக் குணமாம். அதுவே அன்பும் அறனும் கொண்ட வாழ்கை. அது சமயவாழ்க்கை. எனிலும் பொருந்தும்; சமைத்து வைக்கப்பட்டதே சமயம். பல்பெருஞ் சமயங்களாய் பல இனச்சமயங்கள் விரிந்து காணப்படினும் அவை ஒவ்வொன்றும் அந்தந்தச் சமயப்பெரியார்களால் ஆராய்ந்து அமைக்கப்பட்டவையேயாம். அம்முறைப்படி வாழ்ந்து கடைத்தேறல் ஒவ்வொருவருக்கும் முக்கிய கடமையாகும். அவ்வாழ்க்கைதான் பிறருக்குத் துன்பம் செய்யாத நீதி கொண்ட சமய வாழ்க்கையாகும். கிறிஸ்தவர்களுக்கு பைபிளும் இஸ்லாமியருக்கு குரானும் புத்த சமயிகளுக்குத் திரிபிடகமும் எப்படி நீதி நூல்களோ அப்படியே இந்து சமயத்தவர்களுக்கு தேவார திருவாசகமும் நலாயிரத்திவ்யபிரபந்தமும் திருக்குறள், நாலடியார் போன்ற நூல்களும் நீதியைக் கூறும் அன்பை, அறத்தை அடிப்படையாகக் கொண்ட சமய நூல்களாம். இவை சமய வாழ்க்கையையே கூறுவனவேயாம்.

ஒருவன் தனக்கும் பிறர்க்கும் பயன்படும் வகையில் அல்லாதனவற்றை நீக்கி நல்லனவற்றைச் செய்தல் மிகவும் அவசியம் என்பதனையே இவை வற்புறுத்துகின்றன. தாமின்புறுவதை உலகின்புறச் செய்தலே சமயவாழ்க்கையின் இலட்சியமாகக் கைக்கொண்டு வாழ முற்படுதலே வாழ்கையின் குறிக்கோளாகக் கைக் கொள்ளல் வேண்டும் என்பதையே அவை வற்புறுத்துவன.

என்று ஒருவன் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் இன்றி இன்சொல் உடையனாய் பொய் குணனை வன்சொல்லில் நீங்கி வாழ முற்படுகின்றானோ அன்றே சமயி ஆகின்றான். வெறும் வெளி வேஷங்கள் சமய வாழ்க்கையைத் தரமாட்டா அவை பிறர் காணக் கைக்கொள்பவையேயன்றி வேறன்று. புற அழுக்குகள் எங்ஙனம் நீரினால் தூய்மையடையுமோ அங்ஙனம் அகத்திலுள்ள அழுக்குகளாய காமம், வெகுளி, மயக்கம், பொய் முதலான தீயவைகள் புனிதமுற வாய்மையாகிய நீர் கொண்டு கழுவிச் சுத்திகரிக்க முற்பட்டு ஒழுகுதலை சமயவாழ்க்கை என கூறுவர் பெரியோர். இதற்காகவே பல நீதி நூல்களையும் சமய நூல்களையும் ஆக்கினர். அவற்றைப் படிப்பதும் உணர்தலும் சிந்தித்தலும் சமய வாழ்க்கை கொண்டோர்க்கு உரிய சிறப்புச் செயல்களாம். நல்லன செய்வதற்கான முறையில் அமைக்கப்பட்ட உடம்பின் பயனை தீயனவற்றில் செலவு செய்வது பெரும் கொடுமையாகும். நல்ல செயல்களை மறந்து தீய செயல்களைப் புரிபவர்கள் மனிதரல்லர். அவர்களையே அசேதனப் பொருள் என்று அழைப்பதால் தோஷமில்லை. பிறர்க்குதவி செய்வதனையே முக்கிய அடிப்படைத் தத்துவமாகக் கைக்கொண்டு ஒழுகுதல் பெரும் பயன் நல்கும் செயல் ஆகும். அது ஒன்றே சமய வாழ்க்கையை ஒழுக வைக்கும் வழியைக் காட்டுவதாய் வரும். மனத்தாலும் தீமை நினையாத பெரும் குணப்பண்பையும் பொய்மை முதலானவற்றை நீக்கித் தாழ்மையான நிலையில் வாழ வைக்கும் அன்பை உள்ளத்துடன் அதாவது ஊனுடன் ஒன்றி இணைக்கச் செய்து அன்புடையர் ஆக்குவதும் அதுவே ஆகும். எப்பொருளைக் கற்பினும் மெய்ப்பொருள் இதுவெனக் காண்பிப்பதும் அன்புக்குணமே. இதனாலேயே "அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" எனக் கூறப்பட்டது. இன்னும் "உயிர்க்குறுகண் செய்யாமை" "யாதொன்றும் தீமையிலாத செயல்" என்பனவாதியனவும் இதன் பாற்பட்டனவே ஆகும்.

நீதியைப் போதிக்கும் திருக்குறள், நாலடியார் போன்ற நீதி நூல்களும் மற்றும் சமய நூல்கள் எனக் கருத்தப்படும் தேவார, திருவாசகபுராணங்களும் பாரதம், இராமாயணம் போன்ற இதிகாச நூல்களும் சமயத்தையும் சமய வாழ்க்கையையும் எப்படி நடத்தலாம் என்று கூறுவனவேயாம். இவற்றைக் கற்பதும் அதன்படி ஒழுகுவதும் ஒருவன் மாட்டுக் கூடுமாயின் அதுவே அவனைப் புனிதப்படுத்தி சமய வாழ்க்கையை அடைய வழி செய்வனவாம்.

நல்வாழ்வு பெறுவது சமய அடிப்படை கொண்ட வாழ்க்கையில் அன்றி வேறுவகையில் அல்லவாகும். இப்போது நாம் நல்ல சுகபலத்துடன், போகபாக்கியங்களுடன், அடிமை கொண்ட ஆண்டான் வாழ்க்கையுடன் வாழ்கிறோம் என்று அகங்காரம் கொண்டு வாழும் மக்கள் தம்மையும் தமது பிறவியின் நிலைமையையும் உணராதவர்களாய் நடக்கத் தொடங்கினால் அது இகபர நலங்களை இழக்கும தீய வாழ்க்கையையே கொடுப்பதாகும். இகபர நலன்கள் கிடைக்க வேண்டி ஒருவன் நினைப்பானாயின் அவன் சமய வாழ்வு வாழ தலைப்பட்டாலன்றி வேறு எவற்றாலும் பெறமாட்டான் என்பது முடிவாகும்.

பொன்னுக்கும் பொருளுக்கும் புகழுக்கும் புடைவைக்கும் நறுஞ்சுவை உணவுக்கும் தலைமை பெறவும் தங்களைத் தாங்களே அடிமை பெறும் மக்கள் எக்காலமும் நன்மை பெற முடியாதவர்களாவர். இறைமைக்குணங்களை அறிந்து இறையன்பு உடையராய் அன்பு, அருள், பொறை, வாய்மை, அகிம்சை முதலான விரதங்களைக் காத்து வாழ்வதனால் சமயவாழ்க்கை உடையனாய் வாழலாம். நித்தம் நித்தம் நீராடுவதனாலும் தாவர உணவை உண்பதனாலும் வெளி வேஷங்களைப் பூண்பதனாலும் ஒருவன் சமய வாழ்க்கை வாழுகிறான் எனச் சொல்வது பொருத்தமற்றதாகும். அகமும் புறமும் தூய்மையுடன் வாழ்வதே வாழ்க்கை அதுவே சமய வாழ்க்கை அதுவே இம்மை மறுமை நலன்களைத் தருவதாகும்.

**- சரவணமுத்து குடும்பத்தினர்.**

*33/1, சிவன்பண்ணை வீதி,*
*கொட்டடி,*
*யாழ்ப்பாணம்.*

(80552)

# அனுமதி அட்டை கிடைக்காதோரும் பரீட்சையில் தோற்ற வசதி

யாழ்ப்பாணம்,நவ.17

தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படும் கல்விமாணி நுழைவுத் தேர்வுக்கு, விண்ணப்பித்து அனுமதி அட்டை கிடைக்காத இடம்பெயர்ந்த பரீட்சார்த்திகள் தோற்றுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது என்று மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி நா.தணிகாசலம்பிள்ளை தெரிவித்தார்.

இந்தப்பரீட்சைக்கு விண்ணப்பித்த ஆவணங்களுடன் பரீட்சை நிலையத்துக்கு சமுகமளித்து தோற்ற முடியும் என்றும் அவர் சொன்னார்.

இந்தப் பரீட்சைக்கான கட்டணமான 200ரூபாவை பரீட்சை நிலையத்தில் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்று விடைத்தாளுடன் இணைக்கலாம் என்றும் அவர் கூறினார்.

(இ-3)

# நிவாரணம் வழங்கப்பட முன் பங்கீட்டு அட்டை பரிசீலனை

யாழ்ப்பாணம்,நவ.17

யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ப.நோ.கூ.சங்கங்களில் பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்ட பின்னரே இம்மாதத்துக்குரிய நிவாரணம் வழங்கப்பட்டுவருகின்றது.

இதற்கென யாழ்.பிரதேச செயலகத்திலிருந்து மூன்று அலுவலர்கள் சங்கங்களுக்கு நேரில் சென்று பங்கீட்டு அட்டைகளைப் பரிசீலித்து வருகின்றனர்.

பங்கீட்டு அட்டைகள் விடயத்தில் கிராம சேவையாளர்கள் ஊழல் செய்துவருவதாகக் கிடைத்துள்ள முறைப்பாடுகளைத் தொடர்ந்தே யாழ்.பிரதேச செயலரின் உத்தரவின் கீழ் இந்த மீளாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

பிரதான குடியிருப்பாளர் அல்லது குடும்ப அங்கத்தவர் ஒருவர் தேசிய அடையாள அட்டையுடன் சென்றால் மட்டுமே இந்த நிவாரணத்தைப் பெற முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று இந்த மீளாய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்ட அலுவலர்களினால் விளக்கமில்லாத பங்கீட்டு அட்டைகள் வைத்திருப்பவர்களுக்கு நிவாரணம் வழங்குவது நிறுத்தப்பட்டது.இதனால் தமக்குரிய நிவாரணத்தைப் பெறமுடியாது சிலர் திரும்பிச் சென்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

(இ-5-6)


இனுவில் லயன்ஸ் கழகம் நடத்தும்

We Serve

## பாராட்டு விழா

* * * * * * * * * * * *

ஐந்தாம் ஆண்டு புலமைப பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவித்தலும் பரிசளித்தலும்

*காலம் :* நாளை (18.11.2000) சனிக்கிழமை காலை 10.30 மணி

*இடம் :* யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

*பிரதம விருந்தினர் :* LION Dr.V.தியாகராஜா

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

லயன் க.தேவராஜா
தலைவர்,
இனுவில் லயன்ஸ் கழகம்.

(8158)


## பிற்போடப்பட்டுள்ளது

யாழ். றோட்டறிக் கழகத்தின் வளர்ச்சி நிதிக்கான அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் 18.01.2001 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

யாழ்.றோட்டறிக் கழகம்.

C/13867)

## அறிவித்தல்

பத்தைமேனி பெண்கள் ஐக்கிய நாணய சங்கத்தின் எண்பார்வை நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் சங்க அங்கத்தவர்கள் அனைவரும் தமது பாஸ் புத்தகங்களை 30.11.2000ஆம் திகதிக்கு முன்னர் திருமதி கணபதிப்பிள்ளை கண்மணி (பொருளாளர்) அவர்களிடம் சமர்ப்பித்து தமது கணக்கு மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர். (80629) தலைவர்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 - 05 - 1926



உதிர்வு 08 - 12 - 1998

### திருமதி சின்னத்தம்பி கனகம்மா (கைதடி)

திதி : 17.11.2000 ஷஷ்டி

அன்பின் திருவுருவே! பாசத்தின் பிறப்பிடமே!! உங்கள் ஆசை முகம் மறைந்து இரண்டு ஆண்டுகள் சென்றாலும்" இன்பமாய் நாம் வாழ்ந்த காலத்தை நினைந்து தவிக்கின்றோம். நீங்கள் எம்மை விட்டுச் சென்றாலும் உங்கள் நினைவு என்றும் எம் நெஞ்சை விட்டு அகலாது.

தாவளை இயற்றாலையை பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி கனகம்மாவின் 2ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று (17.11.2000) மூத்தவிநாயகர் கோவிலடி, கரணவாய், கரவெட்டியில் மகன் சின்னத்தம்பி முருகமூர்த்தியின் தற்காலிக வசிப்பிடத்தில் நடைபெறும்.

நிரந்தர முகவரி:
*முருகன் இரும்பு தொழிற்சாலை,*
*மீசாலைகிழக்கு,*
*மீசாலை.*

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(C/13871)

## அம்பாறையில் டிராக்டர் மீது தாக்குதல்

கொழும்பு,நவ.17

அம்பாறையில் படையினருக்கு உணவு கொண்டு சென்ற டிராக்டர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் டிராக்டர் தகர்த்து அழிக்கப்பட்டதுடன் இராணுவ சாரதி ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் இன்னொருவர் காயமடைந்தார் எனவும் விசேட ஊடகத் தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாயன்று காலை 7.35மணியளவில் இடம்பெற்றது.

காயமடைந்தவர் அம்பாறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-8)

## ரூ.2000 கொடுப்பனவு ஒத்திவைப்பு

நவாலி,நவ.17

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் சங்கானை மக்கள் வங்கிக் கிளையில் வைத்து நேற்று முன்தினம் முதல் வழங்கப்படவிருந்த இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவுகள் எதிர்வரும் 22ஆம் திகதி முதல் வழங்கப்படும் என்றும் -

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலருடன் தொடர்பு கொள்ளுமாறும்- சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

(இ-100)

## விரிவுரைகள் ஆரம்பமாவது தாமதமாகும்

காரைநகர்,நவ.17

பலாலி ஆசிரியர் கலாசாலையின் விரிவுரைகள் ஆரம்பமாவது தாமதமாகும் என கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

நேர்முகப்பரீட்சை ஒன்றுக்காகக் கொழும்பு சென்றுள்ள மேற்படி கலாசாலையின் விரிவுரையாளர்கள் கப்பல் போக்குவரத்துத் தடைப்பட்டுள்ள காரணத்தினால் யாழ்.திரும்பாமையே விரிவுரைகளை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்படக் காரணம் என்று அறிவித்துள்ளார். (இ-7-73)

## 75 பேர் கைதாகி விடுவிப்பு

கொழும்பு,நவ.17

கல்கிசை, மொறட்டுவ பகுதிகளில் கடந்த செவ்வாயன்று பொலீஸாரினால் 75 பேர் கைது செய்யப்பட்ட போதிலும் நேற்றுமுன்தினம் காலை அவர்கள் அனைவரும் விடுவிக்கப் பட்டனர்.

கைது செய்யப்பட்டு விடுவிக்கப் பட்டவர்களில் பன்னிரண்டு பேர் மாணவ, மாணவியர்கள் ஆவர்.

கடந்த செவ்வாய் நண்பகல் முதல் மாலை வரை மேற்படி பகுதிகளிலுள்ள கடற்கரைப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என மொறட்டுவ பொலீஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களின் பெற்றோர் பொலீஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு எச்சரிக்கப்பட்ட பின்னரே 75 பேரும் விடுவிக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-8)

## அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலங்கை

உயிரியல் விஞ்ஞான கற்கைநெறி 2000 / 2001

(வெற்றிடம் நிரப்பு பட்டியல் - 01)

மேற்படி கற்கை நெறிக்கு வெற்றிடம் நிரப்பு பட்டியல் 1 இல் தெரிவானோர் விவரம் யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞான பீடாதிபதி காரியாலய விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

விரிவுரைகள் 2000.11.20ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

ஆகவே தெரிவான மாணவர்கள் தங்கள் பதிவினை கூடிய விரைவில் 24.11.2000க்கு முன்னர் மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

பதிவாளர்
16.11.2000

(C/13862)

## மூக்குக் கண்ணாடி தவறிவிட்டது

கொக்குவில் சந்தியில் இருந்து பொற்பதி றோட் ஊடாக கோண்டாவில் சந்தி வழியாக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு நேற்றுப் பிற்பகலில் மோட்டார் சைக்கிளில் செல்லும் பொழுது எனது பாவனையில் உள்ள கறுப்பு பிறேம் கண்பார்வைக் கண்ணாடி தவறி விழுந்துவிட்டது.

இது மண்ணிறக் கவர் கொண்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் உதயன் பணிமனையில் ஒப்படைக்கும்படி வேண்டுகின்றேன்.

ச.நா.தணிகாசலம்பிள்ளை,
மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

*'சுபஸ்தான்'*
*672, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C/13869)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணகம் 02 - 10 - 1940



விண்ணகம் 18 - 10 - 2000

### அமரர் சின்னையா திரவியம்

கடந்த 18.10.2000 அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர் சின்னையா திரவியம் அவர்களது இறுதிக் கிரியையில் பங்குகொண்டு உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு -

இன்று (17.11.2000) வெள்ளிக்கிழமை நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*தம்பாலை,*
*அச்சுவேலி.*

மனைவி, மகன்

(C/13868)

# மரண அறிவித்தல்கள்

## விசுவலிங்கம் பஞ்சாட்சரம் (ஆமி)

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் பஞ்சாட்சரம் (ஆமி) நேற்று (16.11.2000) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற (நாகேஸ்வரி) யோகேஸ்வரி என்பவர்களின் அன்புக் கணவரும் கார்த்திகேசு, ஆச்சியம்மா, சிவஞானம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், தில்லையம்பலம், சின்னத்துரை அன்னம்மா ஆகியோரின் மைத்துனரும் விஜயேந்திரன் (நோர்வே), விஜியமாலினி (சுவிஸ்), விமலேந்திரன் (சுவிஸ்), விபுலேந்திரன் (பிரான்ஸ்), வில்வேந்திரன், லவேந்திரன் (இந்தியா), குசேந்திரன் (கணேசன் புடவையகம்), சுவேந்திரன்,கஜேந்திரன் (இணுவில் இந்துக் கல்லூரி), பவீந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2000) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மதியம் 12 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
மனைவி, பிள்ளைகள்.

*"விஜியகிரி"*
*இணுவில் மேற்கு.*

(80627)

## முருகேசு ஜெகராஜசிங்கம்

(முன்னாள் கணக்காளர் - NOORANI TILES COPORATION, NEGOMBO)

கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும், தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட தற்சமயம் புஸ்பா அன் கோ நிறுவனத்தில் பணிபுரிந்தவருமான முருகேசு ஜெகராஜசிங்கம் (முன்னாள் கணக்காளர் - Noorani Tiles Coporation, Negombo) நேற்று (16-11-2000) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்தின் மகளான கமலேஸ்வரியின் அன்புக் கணவரும், தம்பிராசா, காலஞ்சென்ற இராசரத்தினம், புவனேஸ்வரி, அரசரத்தினம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2000) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு தாவடி இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிள்ளையார் கோயிலடி,*
*தாவடி.*

தகவல்:
மனைவி

(C/13870)

# புலிகள் அனுமதி வழங்கினால் யாழ். – மன்னார் படகுச் சேவை

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

கொழும்பு,நவ.17

விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கினால் யாழ்ப்பாணத்துக்கும் - மன்னாருக்கும் இடையிலான பயணிகள் படகுச் சேவை விரைவில் ஆரம்பமாகும். இதற்காகப் படையினருடன் தொடர்புகொண்டு சகல ஏற்பாடுகளையும் நான் செய்து தருவேன்.

வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்குக் கிழக்குத் தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட மீன்பிடிச் சங்கப் பிரதிநிதிகளுக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்றுமுன்தினம் கொழும்பிலுள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மன்னாருக்கும் - யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான பயணிகள் படகுச் சேவைக்கு புலிகள் பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கவேண்டும். இந்த உத்தரவாதத்தை மீன்பிடிச் சங்கங்களே விடுதலைப் புலிகளிடமிருந்து பெற்றுத் தரவேண்டும்.

புலிகளின் அனுமதியும் மீன்பிடிச் சங்கங்களது ஒத்துழைப்பும் கிடைக்குமானால் விரைவில் படகுச் சேவையை ஆரம்பிக்கக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறு அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# உயிரியல் விஞ்ஞானத் துறைக்கு தெரிவான மேலும் 28 பேர் விவரம்

யாழ்.பல்கலைக்கழக உயிரியல் விஞ்ஞானத் துறைக்கு வெற்றிடங்கள் நிரப்பும் பட்டியல் மூலம் மேலும் 28 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் விவரம் வருமாறு:-

★ ஆர். அமுதினி- சங்கரத்தை.
★ எஸ். ஜீவனா- கோப்பாய் வடக்கு.
★ எஸ்.மயூரன்- மயிலிட்டி வடக்கு.
★ பி. துவாரகா- கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
★ எஸ். விஜயகௌரி- பருத்தித்துறை.
★ எஸ். யோகலஷ்மி- கோப்பாய.
★ கே. சித்ருபினி- நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
★ சி சிவானுஜா- கோண்டாவில் கிழக்கு.
★ ஆர். வித்யரூபா- மானிப்பாய்.
★ எம். பத்மநாதன்- அத்தியடி.
★ எஸ். பிரதீபா- அச்சுவேலி வடக்கு.
★ எஸ்.ஜி. சுதாகரன்- இருபாலை கிழக்கு.
★ ரி. திருமகள்- கொழும்புதுறை.
★ எஸ். அம்பலவாணர்- நீராவியடி.
★ ரி. அருள்பிரதாசன்- தம்பாலை.
★ ஜே.பி.காயத்திரி- சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.
★ கே. பிருந்தா- இளவாலை.
★ எஸ். கிருத்திகா- வரணி.
★ எஸ். நதுரிகா- பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
★ ஜே.சுராஜினி- நவாலி தெற்கு.
★ கே.வாணிமுகுந்தன்- தம்பாலை.
★ பி. காந்தமூர்த்தி- கந்தர்மடம்.
★ கே. பிரதீபன்- கரவெட்டி.
★ ஏ. தவராஜா- நெல்லியடி வடக்கு.
★ எம். ரஞ்சினி- வவுனியா.
★ ரி. யோககுலராணி- கல்பிட்டி.
★ பி. சுந்தரலிங்கம்- வவுனியா.
★ வி. ஜெயகாந்தன்- மாங்குளம.

(முன்வந்த செய்தி 3ஆம் பக்கத்தில்) (இ-6-10)

## நகரில் 2 இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம்,நவ.17

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள கில்னர் ஒழுங்கையில் படையினரைக் கண்டு ஓடிய இளைஞர்களை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் சந்தேகத்தின் பேரில் இரு இளைஞர்களைக் கைது செய்தனர்.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் இப்பகுதியில் ரோந்து வந்த படையினரைக் கண்ட சைக்கிளில வந்த இரு இளைஞர்கள் சைக்கிளைப் போட்டுவிட்டு தப்பியோடி விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து அங்கு படையினரால் சரமாரியாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்ட போதும் இளைஞர்கள் ஓடி மறைந்துவிட்டனர் என்று கூறப்படுகிறது.

இச் சம்பவத்தின் எதிரொலியாக அப்பகுதியில் தேடுதலில் ஈடுபட்டிருந்த படையினர் சைக்கிளில வந்த இரு இளைஞ்களை கைது செய்து அழைத்துச் சென்றனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் விடுவிக்கப்பட்டார்களா? அல்லது தடுத்து வைக்கப்பட்டுள்ளார்களா? என்ற விவரம் இச் செய்தி எழுதும் வரை தெரியவரவில்லை. (இ-5-6-10)

## திருமலையில் கலை இலக்கிய விழா

யாழ்ப்பாணம்,நவ.17

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சு நடத்தும் வருடாந்த கலை இலக்கிய விழா இன்று முதல் மூன்று தினங்களுக்கு திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## மண்எண்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றர் டீசலின் புதிய விலை 21 ரூபா 50 சதம் ஆகும். ஒரு லீற்றர் லங்கா சுப்பர் டீசலின் விலை 26 ரூபா 80 சதம்.

ஒரு லீற்றர் மண்எண்ணெயின் புதிய விலை 17 ரூபா 40 சதம். தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் சூளை எண்ணெயின் ஒரு லீற்றர் விலை 19 ரூபா 70சதம் எனவும்- தெரிவிக்கப்பட்டது (இ-7)

# யாழ்.விஞ்ஞான சங்கத்தின் வினா விடைப் போட்டி

யாழ்ப்பாணம்,நவ.17

பாடசாலை மாணவர்கள் மத்தியில் விஞ்ஞான அறிவை வளர்க்கும் வகையில் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் நடத்தும் வினா விடைப் போட்டியும் கட்டுரைப் போட்டியும் நாளை சனிக்கிழமை குடாநாட்டிலுள்ள நான்கு பாடசாலைகளில் நடைபெறவுள்ளன.

யாழ்.இந்து மகளிர் கல்லூரி, இராமநாதன் கல்லூரி மற்றும் வட. இந்து மகளிர் கல்லூரி, வேலணை வைத்திலிங்கம் துரைசுவாமி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இந்தப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

வினா விடைப் போட்டி முற்பகல் 10.30 மணி முதல் 11.30 மணி வரைக்கும், கட்டுரைப் போட்டி 11.45 மணிமுதல் 12.45 மணி வரையும் நடைபெறும். (இ-7)

## நாட்டில் 8,000 எய்ட்ஸ் நோயாளிகள்!

கொழும்பு,நவ.17

நாட்டில் எண்ணாயிரம் பேருக்கு எச்.ஐ.வி. கிருமி தொற்றியுள்ளதாக கொழும்பில் நேற்று நடைபெற்ற "எய்ட்ஸ்" தொடர்பான கருத்தரங்கு ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச "எய்ட்ஸ்" தினத்தை முன்னிட்டு இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்ட அறிக்கைகளில் சுமார் 350 பேருக்கு எச்.ஐ.வி. கிருமி தொற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் மதிப்பீடுகளின்படி எண்ணாயிரம் பேருக்கு எச்.ஐ.வி. கிருமி தொற்றியிருக்கலாம் எனக் கருதப்படுவதாக இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டபலரும் தெரிவித்தனர்.

இதுவரை 88 பேர் "எய்ட்ஸ்" நோயினால் மரணமாகியுள்ளனர் எனவும் 117 பேர் கடுமையான நோய்க்கு உள்ளாகி ஆபத்தான நிலையில் உள்ளனர் எனவும் - தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## நிமலனின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக் குழு உறுப்பினர்களும் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஆறு வேட்பாளர்களும் கூடி தமிழர் விடுதலைக் கூட்டணியின் கல்குடாக் கிளையினாலும், பொதுமக்களாலும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிடம் சம்பந்தமாக கூறப்பட்டிருக்கும் கருத்துக்களை மிகவும் அனுதாபத்துடன் ஆராய்ந்தனர்.

மாவட்ட விகிதாசார தேர்தல் முறையின்படி ஒரு வெற்றிடம் நிரப்பப்படுவதற்கு சட்ட விதிகள் உள்ளன. சட்ட விதிகளின்படி அந்த வெற்றிடத்தை நிரப்பும் அதிகாரம் நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்தின் அறிவிப்பின் அடிப்படையில் முற்றுமுழுதாக தேர்தல் ஆணையாளரால் மேற்கொள்ளப்படவேண்டிய ஒரு விடயமாகும். சட்ட விதிகளின் பிரகாரம் வெற்றிடத்தை நிரப்பும் கருமத்தில் கட்சிக்கு தன்னிச்சையான அதிகாரம் எதுவும் இல்லை.

நிமலன் சௌந்தரநாயகத்தின் மறைவின் காரணமாக கல்குடாத் தொகுதி மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் இழப்பை கட்சி மிகவும் அனுதாபத்துடன் புரிந்துகொள்ளும் அதேவேளையில் இவ் விடயத்தில் மேற்குறிப்பிட்ட தேர்தல் சட்ட விதிகளின் அடிப்படையில் நிலவும் நிலைமையை கல்குடாத் தொகுதி மக்கள் புரிந்து கொள்வார்கள் என கட்சி எதிர்பார்க்கின்றது. அதேவேளை மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத் தொகுதியில் கல்குடா உள்ளடங்குவதால் கல்குடாத் தொகுதி மக்களின் நலன்கள் எப்பொழுதும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்று கட்சி முழு நம்பிக்கை கொண்டுள்ளது - என்றுள்ளது. (இ-3)

## ஒரு விமான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்ல இருவழிப் பயணத்துக்கான பயணச் சீட்டுப் பெறுபவர்கள் தாம் திரும்பும் திகதியை கொழும்பில் இரத்மலானையிலுள்ள 'ஹெலிரூர்ஸ்' அலுவலகத்திலும் -

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வர இருவழிப் பயணத்துக்கான பயணச் சீட்டுப் பெறுபவர்கள் யாழ்ப்பாணத்தில், வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபை அலுவலகத்திலும் - பதியவேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

இருவழிப் பயணச் சீட்டு இரு மாதங்களுக்குச் செல்லுபடியாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.(இ-3)

## கரையோர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பலை இந்தியா 2 கோடி அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்கின்றது.

இந்தக் கப்பலில் 40 மில்லிமீற்றர், 20 மில்லிமீற்றர் கனன் ரக ஆயுதங்கள் பொருத்தப்பட்டிருக்கும்.

இந்தக் கப்பலில் பணிபுரியவிருக்கும் 150 கடற்படையினர் பயிற்சிக்காக கடந்த ஓகஸ்டில் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டிருந்தனர்.

அவர்கள் பயிற்சியை முடித்து இந்தக் கப்பலில் திரும்பவிருக்கின்றனர். (இ-3)

## நோர்வே.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லுள்ள நோர்வேத் தூதரகத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர். ஊர்வலத்தில் சுமார் 100 பௌத்த பிக்குமாரும் சிஹல உறுமயவின் பிரமுகர்களான திலக் கருணாரத்ன, சம்பிக்க ரணவக்க ஆகியோரும் தலைமை வகித்தனர்.

வாட் பிளேசிலுள்ள நோர்வேத் தூதரகத்தை அடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆவேசத்துடன் சமாதான எதிர்ப்பு, நோர்வே எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பினர்.

நோர்வே தனது தூதரகத்தை மூடிவிட்டு நாட்டிலிருந்து வெளியேறி விடவேண்டும் என்றும் -

எமது எச்சரிக்கையையும் மீறி நோர்வே தொடர்ந்து மத்தியஸ்தப் பணியில் ஈடுபட்டால் பாரிய விளைவுகளை அது சந்திக்க நேரிடும் என்றும் - ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமெழுப்பினர்.

சமாதான முயற்சிக்கு ஆதரவு வழங்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கடும் வார்த்தைகளால் வைதனர்.

ஆர்ப்பாட்டம் முடியும் வேளை எரிக் சொல்ஹெய்மின் கொடும்பாவி எரிக்கப்பட்டது. (அ-3)

## மட்டுவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டுவில் பிரதேசம் படையினரின் கட்டுப்பாட்டில் வந்த பின்னர் அந்த ஆலயத்துக்கு கடந்த புதன் கிழமை அக்கோயிலின் குருக்களான மகேஸ்வரக்குருக்கள், லோகேஸ்வர சர்மா, கிரிசா சர்மா மற்றும் எம்.சிவகுரு ஆகியோரைப் படையினர் அழைத்துச் சென்றனர்.

அங்கிருந்த இரும்புப் பெட்டகத்தைத் திறந்த குருக்கள் அதில் இருந்த ஒரு லட்சத்து 29 ஆயிரத்து 180 ரூபாவையும், 103 பவுண் தங்க நகைகளையும், மற்றும் முக்கிய பொருள்களை எடுத்துச் சென்றனர். இதற்குப் படையினர் ஒத்துழைப்பு வழங்கினர் - என்றுள்ளது. (இ-3)

## கலைப்பீட.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'ராகிங்'கினால் பாதிக்கப்பட்ட முதலாம் வருட மாணவியின் கல்வி மற்றும் பல்கலைக்கழக செயற்பாடுகளுக்கு 'ராகிங்'கில் ஈடுபட்ட 6 மாணவிகளும் ஒத்துழைப்பு வழங்குவதற்கும் -

குறித்த மாணவி எதிர்வரும் திங்கட்கிழமை பல்கலைக்கழகத்துக்கு வருகை தரும்பொழுது அவரிடமும் இவர்கள் மன்னிப்புக் கேட்பதற்கும் - உறுதிமொழி வழங்கியுள்ளனர்.

இது தொடர்பாக பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கருத்து வெளியிடுகையில் - 'ராகிங்'கில் ஈடுபட்டவர்கள் பெண்களாகவும், இறுதியாண்டு மாணவிகளாகவும் இருக்கின்ற காரணத்தினாலும் தமது தவறினை ஏற்றுக் கொண்டு மன்னிப்புக் கேட்டுள்ளதுடன் பாதிக்கப்பட்ட மாணவியின் நலனைக் கவனத்தில் கொண்டுள்ளதாலும் எச்சரிக்கை செய்யப்பட்டு குறைந்த தண்டனை வழங்கப்பட்டுள்ளது - என்றார். (இ-5-6)

## நாட்டின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்நோக்கும் பிரச்சினையும் சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள எரிபொருள்கள் விலை உயர்வும் நாட்டின் பொருளாதார விருத்திக்கு இரண்டாவது சுமையாகும்.

நாட்டின் நிதிக் கட்டமைப்பில் மாற்றங்களை வகுத்து வர்த்தக ரீதியில் சவால்களை எதிர்கொள்ள முயன்றுவரும் போதும் அரச தனியார் நிறுவனங்களை மறுசீரமைக்க மேற்கொள்ளப்படும் செலவுகள் நாட்டின் அடுத்த சுமையாகும்.

இப்படியான காரணங்கள் நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுக்க பெரும் தடைகளாக நீடித்து வருகின்றன.

எந்த நாடும் மத்திய வருவாயை பெறும் நாடு என்ற அந்தஸ்தை பெற்ற போதும் வெளிநாடுகளின் உதவி மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் கடன் உதவிகள் என்பவற்றில் தங்கியிராது நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை தொடர்ந்து முன்னெடுக்க முடியாது.

ஆகவே வெளிநாடுகளின் உதவிகளுடன் மேற்கொள்ளும் அபிவிருத்தி நடவடிக்கைகள் நாட்டின் திருப்திகரமான முன்னேற்றத்திற்கு வழி செய்யும் - என்றார். (இ-8)


அளவையியல்
K.T. மோகன்
ஆரம்பம்:
A/L 2002
18.11.2000
குறியீட்டளவையியல்
10.00 மணி
A/L 2001
25.11.2000
பகுதி II - 11.00 மணி
பகுதி I
போலிகள் 12.00 மணி
DMI
யாழ்நகர்.
(805593)

BRIGHTMAN
கல்வி நிலையம்
(நீராவியடி பிள்ளையார்கோயில் முன்பாக)
பிறவுண்றோட், யாழ்நகர்
A/L 2001
இணைந்த கணிதம்
PURE:- சிக்கல் எண்
APP. :- புவியீர்ப்பு மையம்
By :- ஐங்கரன் B.Sc.
ஆரம்பம்:- நாளை (18-11-2000)
SAT. - 1.00 p.m.
(80615)

இன்றைய
வீடியோ CD வெளியீடு
வெண்ணத்தமிழ் பாட்டு
(பிரதிகளை 11.00 மணிக்குப் பின்பு பெற்றுக்கொள்ளலாம்.)
மூர்த்தி வீடியோ
மானிப்பாய் (C/13873)

JAFFNA TECHNICAL INSTITUTE - SRILANKA
JTI
புலமைப்பரிசில் திட்டம்
2001
விபரங்கள் நாளைய உதயனில்.... (C/13865)


## மரண அறிவித்தல்

### திருமதி வைத்தி எஸ்தாக்கி மரியப்பிள்ளை

சக்கோட்டை அல்வாயைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி வைத்தி எஸ்தாக்கி மரியப்பிள்ளை நேற்று (16.11.2000) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் வைத்தி எஸ்தாக்கியின் அன்பு மனைவியும், அந்திரேஸ், திரேசம்மா(கிளி), அந்தோனிப்பிள்ளை றீற்றம்மா(குயில்), அல்பிரட் (கியூடெக்), நீக்கிலஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும் அந்திரேஸ், அந்தோனிப்பிள்ளை, றோஸ்ராணி, ஜெயமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (17.11.2000) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் (புதிய நேரம்) புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித சவேரியார் சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அல்பிரட்
(மகன்)

*சக்கோட்டை,*
*அல்வாய்.*

(C/13872)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.11.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.